# “வாழ்வதற்குப் பெறுமதியற்ற ஓர் வாழ்க்கை”

கோவிட்-19 இற்கு ஈடுகொடுத்தல்:
சித்திரவதைகளில் இருந்து உயிர்தப்பி வந்து
பிரித்தானியாவில் வசிப்போரின் அனுபவம்

**சந்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்றிட்டம், இலங்கை (ITJP Sri Lanka)**

## அறிமுகம்

சித்திரவதைகளில் இருந்து உயிர்தப்பி சமீபத்தில் பிரித்தானியாவிற்கு வந்துள்ள 62 பேரை கோவிட்-19 வைரஸ் தொற்று எவ்வாறு பாதித்துள்ளது என்பதைப் பற்றி இந்த அறிக்கை சுருக்கமாகக் கூறுகின்றது. இந்த வைரசானது சிறுபான்மை இனத்தவர்கள், புலம்பெயர்ந்தவர்கள் மற்றும் வறியவர்கள் உட்பட்ட வலுவற்ற சனத்தொகையினருக்கு விகிதாசாரமின்றி மிகமோசமான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. சித்திரவதையினால் பாதிக்கப்பட்டவர்களும் இந்தவகையைச் சேர்ந்தவர்களேயாயினும், ஒரு மனிதனின் உடல் மற்றும் உள நலத்தினை கெடுக்கும் சித்திரவதைக்கு உட்பட்டவர்கள் என்பதால் அவர்கள் மிகவும் பாதிப்புக்குள்ளாகக்கூடியவர்கள்.

இவ்விடய ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட இலங்கையைச் சேர்ந்த அனைத்து ஆண்களும் பெண்களும் இலங்கையில் சித்திரவதைகள் மற்றும் தடுப்புமுகாம்களிலிருந்து தப்பிவந்தவர்களும் அதைவிட பாலியல் வன்முறைக்கு உட்பட்டவர்களும் ஆவர். இவர்கள் பிரித்தானியாவில் அகதிகளாக அல்லது அகதித் தஞ்சம் கோருபவர்களாக உள்ளனர். அனேகமானவர்கள் ஆங்கிலம் பேசத் தெரியாதவர்கள். தமது புகலிடக் கோரிக்கை தொடர்பில் தீர்க்கமான முடிவு இன்றி வாழ்வதால் அவர்களுக்கு பாதுகாப்பின்மை என்பது சாதாரணமான ஒன்றாகவே உள்ளது. இந்த நிலமையினைத் தற்போது பரவிவரும் வைரஸ் மேலும் அதிகரிக்கின்றது. தமது பெற்றோர்களை, சகோதரர்களை, மனைவிமாரை அல்லது தமது பிள்ளைகளை மீண்டும் எப்போது பார்ப்போம் என்பது அவர்களுக்குத் தெரியாது. அவர்களுடைய பௌதீக மற்றும் சமூக தனிமைப்படுத்தலை இந்த வைரஸ் மேலும் மோசமாக்கியுள்ளதுடன் அவர்களை மீண்டும் அதிர்ச்சிகுள்ளாக்குகின்றது. அத்துடன் சில சந்தர்ப்பங்களில் அவர்கள் அதிர்ச்சிகளில் இருந்து மீளுவதற்கான காலங்களையும் அதிகரிக்கின்றது. மாதங்கள் நீடித்த முடிக்கநிலையின் (lockdown) பின்னர் இவர்கள் பசியுடனும் பயத்துடனும் நம்பிக்கையற்றும் இருக்கின்றனர். சிலர் தமது வாழ்வை முடித்துக்கொள்ளவும் சிந்திக்கிறார்கள்.

இந்த வைரஸ் தொற்றுநோய்க்கு முன்னதாகவே ஏதிலிகளாக உள்ள உயிர்பிழைத்துத் தப்பிவந்த இந்தக் குழுவினர் எதிர்கொண்டுவரும் பிரச்சினைகளை கோவிட்-19 மேலும் அதிகரித்துள்ளது. சித்திரவதையிலிருந்து தப்பிப் பிழைத்தவர்கள் இந்த வைரஸ் தொற்றுக்குள்ளாகக்கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளபோதிலும் பிரித்தானியாவின் குறைபாடுடைய நலன்புரி மற்றும் புகலிடத் திட்டத்தின் வலுவற்றதன்மையினை இந்த வைரஸ் அம்பலப்படுத்துகின்றது. 11 பேரிடம் மேற்கொண்ட ஆய்வுகள் இதனை விளக்குகின்றது. இந்தச் சிறிய குழுவினரை பராமரிக்கும் முயற்சியிலிருந்து எமக்கு கிடைக்கும் பட்டறிவானது பிரித்தானியாவிலும் மற்றும் ஏனைய நாடுகளிலும் உள்ள அகதிகள் மற்றும் புகலிடம் கோரிக்கையாளருக்கு உதவுவோருக்கான படிப்பினையாக இருக்கக்கூடும் என்பது எமது நம்பிக்கையாகும். இருப்பினும், அவர்களுடைய தேவைகளை தனிப்பட நிவர்த்திசெய்வது என்பது சிறிய தொண்டு அமைப்புக்களுக்கு ஒரு சவாலாக இருக்கின்றது. இதற்கு அரசாங்கத்தின் உடனடித் தலையீடு தேவைப்படுகின்றது. புகலிடக் கோரிக்கையாளர்களுக்கான சட்டவிதிமுறைகளில் அதிகரிப்பினை மேற்கொள்வது முக்கியமானதாக உள்ள அதேவேளை, இந்த ஆய்வுகள் வெளிப்படுத்துவதைப்போல், அவர்களுக்கு ஏனைய உடனடி சலுகைகளும் தேவைப்படுகின்றன. குறிப்பாக:

- தற்காலிக வதிவிட அனுமதி வழங்குதல்: இந்த அசாதாரண சூழலில் பிரித்தானியாவிலுள்ள புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு பிரித்தானிய அரசாங்கம் தற்காலிக வதிவிட அனுமதியினை வழங்குவதோடு அவர்களுடைய நாட்டுக்கு கட்டாயமாக திருப்பி அனுப்புவதை தற்காலிகமாக நிறுத்தவேண்டும்.

- தற்காலிகமாக வேலைசெய்யும் அனுமதி வழங்குதல் : வேலை செய்வதற்கான தற்காலிக அனுமதியினை பிரித்தானிய அரசாங்கம் வழங்கவேண்டும். இது பருவகால தொழிலாளர்களுக்கான தேவையை நிவர்த்திசெய்ய உதவியாக இருக்கும்.

- மருத்துவ வசதிகளை மேம்படுத்தல் : வைத்தியருடனான சந்திப்புக்களை மேற்கொள்ளுதல், மருந்துச் சிட்டைகளைப் புதுப்பித்தல், இலவச மருந்துகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் உளவள சிகிச்சைக்கு முன்னுரிமை வழங்குதல் போன்றவற்றை பிரித்தானிய அரசாங்கம் மேம்படுத்தவேண்டும். அத்துடன்

- NASS (புகலிடக் கோரிக்கையாளர்களுக்கான உதவி) விண்ணப்பத்தினை இலகுபடுத்துதல் : முகவரி உறுதிப்படுத்தலுக்கு சித்திரவதையிலிருந்து தப்பியவர்களுக்கான உதவி வழங்கும் ஓர் தொண்டு நிறுவனத்திடம் அல்லது உளவள மருத்துவ அமைப்பிடம் இருந்து பெற்ற சிபார்சுக் கடிதத்தினை ஏற்றுக்கொள்வதன் மூலம் பிரித்தானிய அரசாங்கம் இந்த நடைமுறையினை இலகுபடுத்தவேண்டும்.

## பின்புலம்

இந்த ஆய்வில் பங்குகொண்டவர்கள் இலங்கையிலுள்ள பாதிக்கப்பட்ட தமிழ் சமூகத்தினைச் சேர்ந்தவர்கள். இலங்கையில் இடம்பெற்ற இன முரண்பாட்டின் விளைவாக இவர்கள் பிரித்தானியாவுக்குத் தப்பிவந்தவர்கள். பாதுகாப்பான இடத்தினை வந்தடைவதற்கு அகதிகள் மேற்கொள்ளும் ஆபத்தான பயணங்கள் பற்றி ஊடக அறிக்கைகள் ஆவணப்படுத்தியுள்ளன. மிக அண்மையில் சிரியா மற்றும் றோகினியாஸ் இனத்தவர்கள் மேற்கொண்ட ஆபத்தான பயணங்களைக் இங்கு குறிப்பிடலாம். இலங்கையில் இடம்பெற்ற போரில் தப்பிய இவர்களும் இதற்கு விதிவிலக்கானவர்கள் அல்லர். இவர்களும் மிகக் கடினமான பயணத்தின் மூலமே பிரித்தானியாவுக்கு வந்துள்ளனர். தமது துன்பகரமான பயணக் கதையினை அவர்களும் கூறுகின்றனர். இவர்களில் அனேகமானோர் இருபதுகள் மற்றும் முப்பதுகளை எட்டிய வயதுடையவர்கள். இவர்கள் இலங்கையில் போர் இடம்பெற்ற காலத்தில் வளர்ந்தவர்கள். குண்டுத் தாக்குதல்கள், பட்டினி, சாவுகள் மற்றும் தொடர்ச்சியான இடப்பெயர்வுகள் இவர்களின் நாளாந்த வாழ்க்கையின் ஓர் பகுதியாக காணப்பட்டது. பொதுவாக, இவர்கள் தமது நெருங்கிய குடும்ப உறுப்பினர்களை இழந்துள்ளனர். இவர்களின் உறவினர்கள் போரின் போது கொல்லப்பட்டுள்ளதோடு மட்டுமல்லாமல் சகோதரர்கள் அல்லது பெற்றோர் காணாமலும் ஆக்கப்பட்டுள்ளனர்.

தடுப்பு முகாமிலிருந்து விடுவித்து இலங்கையை விட்டு அனுப்புவதற்காக இவர்களுடைய குடும்பத்தினர் தம்மிடம் உள்ளவற்றை விற்று லஞ்சம் செலுத்தியுள்ளனர். பலருக்கு ஆறாத காயங்களுடன் அணிந்துள்ள உடைககளில் இரத்தம் ஒட்டியவாறும் மனித கடத்தற்காரர்களின் தயவில் மேற்கொண்ட முதலாவது வெளிநாட்டுப் பயணமாகவே இது இருந்துள்ளது. இந்த மனித கடத்தற்காரர்களின் கடனை அடைக்கமுடியாதவர்களாகவே இவர்கள் இன்னும் உள்ளனர்.

முன்னர், இந்தக் குழுவிலுள்ள அனேகமானவர்கள் இலங்கை அரச அடியாட்களால் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டு சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டதோடு பாலியல் ரீதியாகவும் துன்புறுத்தப்பட்டுள்ளதாக தமது கதைகளை கூறியுள்ளனர். பலர் பல தடவைகள் தடுத்துவைக்கப்பட்டு சித்திரவதைக்குள்ளானவர்கள். இலங்கை அரச அடியாட்கள் மேற்கொண்ட சித்திரவதை முறைகள் தொடர்பாக சிறந்தமுறையில் ஆவணப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது : உடைகளைக் களைந்து தலைகீழாய் கட்டித் தொங்கவிட்டு மயக்கமுறும்வரை அடித்தல், தண்ணீரினுள் மூழ்கவைத்தல், பெற்றோல் மற்றும் மிளகாய்த் தூள் விசிறப்பட்ட புகைமண்டலத்தில் முச்சுத் திணறடித்தல், அந்தரங்கப் பகுதிகளில் மிளகாய்த் தூள் போடுதல், சிகரெட்டினால் சுடுதல், சூடாக்கப்பட்ட இரும்புக் கம்பியினால் குறிவைத்தல், நிகங்கள் மற்றும் பற்களைப் பிடுங்குதல், ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஒரே மாதிரியாக ஒழுங்குமுறையில் பாலியல் வன்புணர்வு மற்றும் பாலியல் துன்புறுத்தல்களை மேற்கொள்ளுதல்.

## சித்திரவதையின் தாக்கம்

சித்திரவதை என்பது மிகவும் மோசமான ஓர் வன்முறையாகும். இது மற்றவர்கள் மீதான நம்பிக்கையினை சிதைக்கின்றது. குடும்பப் பிணைப்புகளை சின்னாபின்னமாக்குகின்றது. ஸ்திரமற்ற சமூக ஆதரவு முறைமைகளை நலிவுறச் செய்கின்றது. முக்கியமாக, இது மனித உறவுமுறைகளில் நல்லொழுக்கமாக கருதப்படும் அனைத்திலும் ஓர் பிறழ்வுநிலையினை உண்டாக்குகின்றது. இதன் விளைவாக, சித்திரவதைக்குள்ளானவர்களின் உறவுப் பிணைப்பு முறைகளை சீர்குலைக்கின்றது. சிறுவயதிலிருந்தே கட்டியெழுப்பப்பட்ட எனைய மனிதர்களுடனான உறவுமுறைமை தொடர்ச்சியாக சிதைக்கப்படுகின்றது. பாதிப்புக்குட்பட்டவர் திடமானவராகவும் வலுவானவராகவும் இருக்கலாம். இருப்பினும் வலி என்பது ஒருவரின் உள மற்றும் உடல் ஒருமைப்பாட்டினையும் நண்பர்களுடனான அவர்களின் விசுவாசத்தினையும் இலட்சியங்களையும் சீரழிக்கக்கூடியது. ஒருவரின் அடையாள உணர்வினை சிதைக்கும்முகமாக வடிவமைக்கப்பட்ட இந்த நடைமுறை மனித நேயமற்ற ஒரு செயல்முறையாகும். இந்த சித்திரவதை தற்செயலாக அல்லாமல் வேண்டுமென்றே மேற்கொள்ளப்பட்டது என்ற அதிர்ச்சியான தன்னுணர்வினையும் ஆதரவற்ற உணர்வினையும் பாதிக்கப்பட்டவருக்கு ஏற்படுத்தியுள்ளது. தாம் அனுபவித்த துன்பத்திலிருந்து நிவாரணமடைய பாதிக்கப்பட்டவர் நாடக்கூடிய ஒரேயொருவர் துன்பத்தினை இழைத்தவர் மட்டுமே. துன்பம் இழைத்தவர்கள் இரக்கமற்ற, விரோத

மனநிலை கொண்ட அல்லது பாதிக்கப்பட்டவரின் வலியினையும் அச்சத்தினையும் மகிழ்ச்சியாகக் கொண்டாடக்கூடியவராகவே உள்ளனர்.

இந்த ஆய்வில் நேர்காணல் மேற்கொள்ளப்பட்டவர்களைப் போன்ற உயிர் பிழைத்துத் தப்பிவந்தவர்கள் தொடர்ச்சியாகப் பல வடிவங்களில் மோசமான உள்ளார்ந்த அதிர்ச்சிகளுக்கு உட்பட்டவர்கள். அத்தகைய அனுபங்கள் மேலும் நீடித்து நிலைத்து இருக்கக்கூடிய சிக்கலான அதிர்ச்சியினை உருவாக்குகின்றது என்பதை இத்துறையில் முன்னிலை வகிப்பவரான ஜூடித் ஹேமன் அடையாளப்படுத்தியுள்ளார்.

அதிர்ச்சிக்குப் பின்னரான சிக்கலான மன அழுத்தக் கோளாறு (Complex PTSD) என ஹேமன் வரையறுத்தது தற்போது ஓர் வகைப்படுத்தப்பட்ட நோய் அறிகுறியாக உள்ளது. மிகவும் மோசமாக அச்சுறுத்தும் அல்லது பயங்கரத் தன்மை கொண்ட அனுபவத்தினைத் தொடர்ந்து விருத்தியடையும் கோளாறு என இது வரையறுக்கப்படுகின்றது. பொதுவாக, தொடர்ந்து அல்லது அடிக்கடி இடம்பெறும் அச்சுறுத்தல் சம்பவங்களில் இருந்து விடுபடுவது கடினமானதாக அல்லது சாத்தியமற்றதாக இருக்கும் (உதாரணமாக, சித்திரவதை, அடிமைத்தனம், இனப்படுகொலை நடவடிக்கைகள், நீடித்த குடும்ப வன்முறை, அடிக்கடி இடம்பெறும் சிறுவர் பாலியல் அல்லது உடலியல் துஸ்பிரயோகம்). PTSD இனைக் கண்டறிவதற்கான அனைத்து அறிகுறிகளும் காணப்படும். மேலும், பின்வருவனவற்றால் Complex PTSD வகைப்படுத்தப்படுகின்றது: 1) பாதிப்பினை ஏற்படுத்தும் கடுமையானதும் தொடர்ச்சியானதுமான பிரச்சினைகள் 2) தன்னைக் குறைத்து மதிப்பிடல், தோற்றுப்போனதாக அல்லது பெறுமதியற்றதாக நம்புவதுடன், அவமான, குற்ற அல்லது அதிர்ச்சியான சம்பவத்துடன் தொடர்புபட்ட தோல்வி உணர்வுடன் இருத்தல் மற்றும் 3) உறவுகளையும் மற்றவர்களுடனான நெருங்கிய உணர்வுகளைத் தக்கவைத்துக்கொள்வதிலும் கடினங்கள் போன்றனவாகும். இந்த அறிகுறிகள் தனிப்பட்ட, குடும்ப, சமூக, தொழில்ரீதியாக அல்லது ஏனைய முக்கிய விடயங்களில் குறிப்பிடத்தக்க குறைபாட்டினை ஏற்படுத்துகின்றன.

கோவிட்-19 முடக்கநிலைக்கு முன்னதாகவே CPTSD, மன அழுத்தம், கவலை, உயிரிழப்பு, நீண்டகால வலி, சுயதீங்கினை விளைவித்தல் மற்றும் தற்கொலை போன்றன உளவியல் பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து இந்த உயிர்தப்பி வந்தர்கள் நாளாந்தம் போராடிக்கொண்டிருந்தனர். துயரங்கள், கடந்த கால சித்திரவதைகள் மற்றும் தனிமை போன்றவற்றை இந்த கோவிட்-19 நெருக்கடி மீண்டும் எழுப்பியுள்ளது. முடக்கநிலை தளர்த்தப்பட்டாலும், அவர்களுடைய வாழ்க்கைப்பயணம் இதேபோன்று உளவியல், உடல் மற்றும் சமூகரீதியாக கடினமானதாகவே இருக்கும்.

மருத்துவ சிகிச்சை தொடர்பாக விரிவாகப் பரிசீலனை செய்வது இந்த அறிக்கையின் நோக்கமல்ல. இந்த அறிக்கையானது எதிர்பாராத இந்தக் காலப்பகுதியில், உயிர்தப்பி வந்தவர்களின் அனுபவங்களை பிரிதிபலிப்பதுடன் சாட்சியாகவும் இருக்கின்றது. CPTSD தொடர்பாக மேலே குறிப்பிடப்பட்டவை கோவிட்-19 இனால் ஏற்பட்ட பாதிப்பினையும் உயிர்தப்பி வந்தவர்களுக்கான உதவி வழங்கும் பலவீனமான கட்டமைப்புக்களின் செயற்பாட்டில் இந்த முடக்கநிலை ஏற்படுத்திய இடையூறுகளையும் விளங்கிக்கொள்வதற்கும் உதவியாக இருக்கும்.

நேர்காணல் மேற்கொள்ளப்பட்ட அனைத்து உயிர்தப்பியவர்களும் லண்டனில் இடம்பெற்ற வாராந்த உளவியல் உதவித் திட்டத்திற்கு சமூகமளித்துக்கொண்டிருந்தவர்கள் அல்லது முன்னர் சமூகமளித்திருந்தவர்கள் ஆவர். பாதிக்கப்பட்டவர்கள் தமது எதிர்காலத்தை கற்பனை செய்யக்கூடியதாக முன்னேற்றம் காண உதவுவதே இந்த வாராந்த ஒன்றுகூடல்களின் நோக்கமாகும். ஆரம்ப கட்டத்திலேயே தலையிட்டால் தசாப்தங்களுக்கு நீடிக்கக்கூடிய விரக்தி, சுயதீங்கு மற்று தங்கியிருத்தல் போன்றவற்றை தடுக்கலாம். இந்தக் குழுவிலுள்ள சிலர் தற்போது உதவித் தொகையினை வென்று பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கின்றனர். ஆனால் அவர்கள் குடிவரவுத் தடுப்பு மையத்தில் வாழ்வதா அல்லது சாவதா என்று இருந்த ஒரு காலமும் இருந்தது. மார்ச் 2020 இன் நடுப்பகுதியில் நேரடியான ஒன்றுகூடல் நிறுத்தப்படவேண்டியேற்பட்டது. இதற்குப்பதிலாக இந்த ஆதரவு தொலைபேசி அல்லது இணைய வழியாக வழங்கப்பட்டது. தற்போதுள்ள குழுவில் உள்ள 44 பேர் புகலிடக் கோரிக்கையாளர்களாகவும் 18 பேர் அண்மையில் அகதி அந்தஸ்து பெற்றவர்களாகவும் உள்ளனர். 50 ஆண்களும் 12 பெண்களும் இந்தக் குழுவில் உள்ளனர். இந்த அறிக்கை எழுதப்பட்டபோது இக்குழுவில் ஆறு பேர் மட்டுமே அகதிகளுக்கான உதவித் தொகையாக வாரம் £37.75 பெற்றுக்கொண்டிருந்தனர். மிகக் குறைந்தளவானோரே ஆங்கிலம் பேசக்கூடியவர்கள்.

## ஆய்வில் பயன்படுத்தப்பட்ட உபாயம்

பிரித்தானியாவின் வெவ்வேறு நகர்களில் வசித்துவரும் சித்திரவதையில் இருந்து தப்பி வந்தவர்களுடன் தொலைபேசி மூலமாக மேற்கொள்ளப்பட்ட விரிவான நேர்காணல்களை அடிப்படையாகக் கொண்டே கீழ்வரும் 11 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் இந்தத் திட்டத்தில் பணியாற்றும் இரு உளவள அலோசகர்கள் உட்பட நான்கு பணியாளர்களும் நேர்காணல் மேற்கொள்ளப்பட்டனர். அத்துடன் பணியாளரினால் எடுக்கப்பட்ட தேவை மதிப்பீட்டுக் குறிப்புக்களும் உள்வாங்கப்பட்டன. இந்தத் திட்டத்தில் பணியாற்றும் தமிழ் பணியாளர்களும் அண்மையில் அகதி அந்தஸ்து பெற்றவர்கள் என்பதுடன் இலங்கையின் பிரச்சினையிலிருந்து தப்பிவந்தவர்கள் என்பதை குறிப்பிடுவது இங்கு முக்கியமானதாகும்.

உளவள ஆலோசகர்களால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு 62 பேர் கொண்ட குழுவிலிருந்து 11 பேர் தெரிவுசெய்யப்பட்டனர். தமது வாழ்வை இந்த கோவிட்-19 எவ்வாறு பாதித்துள்ளது என்பது பற்றிய ஓர் அறிக்கை தயாரிப்பதற்கான நேர்காணலில் பங்குகொள்வதற்கு அவர்களிடம் உணர்வுரீதியாகவும் மனரீதியாகவும் திடம் இருந்தது. அவர்கள் அடையாளம் காணப்பட்டதும், இந்த அறிக்கையினைத் தயாரிப்பதற்கு நோ்காணலில் பங்கு கொள்ள ஆர்வம் உள்ளதா எனக் கேட்கப்பட்டது. இதற்கு அனைவரும் ஏற்றுக்கொண்டனர். ஒவ்வொரு நேர்காணலின் ஆரம்பத்திலும் இந்த நேர்காணலின் நோக்கம் பற்றியும் எத்தகைய தகவல் தேவை என்பது பற்றியும் தெரிவிக்கப்பட்டது. அவர்களுடைய வாழ்வை இந்த கோவிட்-19 எவ்வாறு பாதித்துள்ளது என்பதை தெரிவிப்பதும் இது தொடர்பான அவர்களுடைய பிரச்சினைகளை தீர்ப்பதற்கு எது உதவும் என்பதை கண்டறிவதுமே இந்த அறிக்கையின் நோக்கம் என அவர்களுக்கு கூறப்பட்டது. இந்த நேர்காணலின் போது அவர்களுடைய கடந்த கால சித்திரவதைகள் மற்றும் ஏனைய குற்றச் செயல்கள் தொடர்பான அனுபவங்கள் பற்றிக் கேட்கப்படமாட்டாது என அவர்களுக்குத் தெளிவுபடுத்தப்பட்டது. ஆள் அடையாள தகவல்கள் எதுவும் இந்த அறிக்கையில் வழங்கப்படமாட்டாது என்றும் யார் இந்தத் தகவலை வழங்கியது எனபதை வெளிப்படுத்தாமலே பெறப்பட்ட அனைத்து தகவல்களும் பயன்படுத்தப்படும் எனவும் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. தங்களுடைய அனுபவங்களை இந்த நேரத்தில் வெளிப்படுத்த அனைவரும் அனுமதித்தனர். நேர்காணல்கள் அவர்களுடைய தாய்மொழியான தமிழில் மேற்கொள்ளப்பட்டன. அவர்கள் அனைவருக்கும் அறிமுகமான ஓர் மொழிபெயர்ப்பாளரும் மொழிபெயர்ப்பு ரீதியிலான பிரச்சினைக்கு உதவுவதற்காகவும் அவர்களுடனான முன்னைய உறவின் காரணமாக உள்ள பரிச்சயமான உணர்வினை ஏற்படுத்துவதன் மூலம் அவர்களுக்கு உத்தரவாதம் வழங்குவதற்காகவும் பிரசன்னமாக இருந்தார். இந்த நேர்காணல்களின் போது, உயிர்தப்பி வந்தவர்கள் தமது அனுபவங்களைப் பற்றிப் பேசுவதற்கு இடமளிக்கப்பட்டது. எந்த வகையிலும் கட்டாயப்படுத்தலாகவோ அல்லது ஊடுருவலாகவோ இருக்கக்கூடாது என்பதில் கவனம் செலுத்தப்பட்டது. இந்த நடவடிக்கை அவர்களை மீண்டும் அதிர்ச்சிக்குள்ளாக்காது என்பதை உறுதிப்படுத்துவதும் முக்கியமானதாக இருந்தது. தமது மனநிலை தொடர்பாக தப்பிவந்தவர்கள் கூறயவற்றையும் நேர்காணல் செய்பவர்கள் பின்பற்றிய தீங்கிழைக்காத / உயிர்தப்பியோரை மையப்படுத்தும் கொள்கைகளையும் இந்த ஆய்வு பிரதிபலிக்கின்றது. இந்த நேர்காணல்கள் 30 நிமிடங்கள் தொடக்கம் ஒரு மணித்தியாலங்கள் வரை மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் எதிர்காலத்திற்கான சாதகமானதும் நம்பிக்கை கொண்டதுமான குறிப்பு ஒன்றுடன் இந்த நேர்காணல்கள் நிறைவுசெய்யப்பட்டன.

இந்த நேர்காணல்கள் நிறைவடைந்ததும் உயிர தப்பிவந்தவர்களின் நிலமைகளை அறியப் பின்தொடர் தொலைபேசி அழைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. 11 பேரில் 5 பேருக்கு உணவு ஒழுங்கு செய்தல், மின்சாரத்திற்கான அவசரகால நிதி உதவித்தொகை வழங்குதல் மற்றும் உளவளத்துணை ஒழுங்குசெய்தல் போன்ற சில உடனடி நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அடுத்தடுத்த வாரங்களில் நோ்காணல்களின் போது இனங்கண்ட நிவர்த்திசெய்யப்படாத வேறுவகையான உதவிகள் ஒழுங்குசெய்யப்பட்டன. கீழே ஆய்வாக மேற்கொள்ளப்பட்டிருக்கும் இந்த 11 நேர்காணல்களையும் அடிப்படையாகக் கொண்டு, இந்தத் தப்பிவந்தோர் குழுவிலுள்ள ஏனையவர்களுக்கான தேவை மதிப்பீடு ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. இந்த தேவை மதிப்பீடும் இந்த அறிக்கைக்கு தகவல் வழங்கியுள்ளது.

## Case Study - விடய ஆய்வு

இந்த ஆய்வு வெளிப்படுத்துவதைப்போல் ஒவ்வொருவரும் வித்தியாசமான சிறை அனுபங்களைக் கொண்டுள்ளனர். எறிகணை வீச்சு மற்றும் குண்டுத் தாக்குதலுக்கு உட்பட்டு சாவுகளுக்கும் இழப்புக்களுக்கும் சாட்சியங்களாக உள்ள இவர்கள் பதுங்குகுழிகளில் தமது கணிசமான காலத்தை கழித்துள்ளனா். அதன் பின்னர் சிறிய அழுக்கு நிறைந்த அறையினுள் தடுத்துவைக்கப்பட்டு தொடர் சித்திரவதைக்குட்படுத்தப்பட்டுள்ளதுடன் பாலியல் வல்லுறவுக்கும் உட்படுத்தப்பட்டுள்ளனர்.

**பசி**

பிரித்தானியாவை கோவிட்-19 தொற்றுநோய் தாக்கியபோது, குடும்பங்கள் தமக்குத் தேவையான அத்தியாவசிய பொருட்களை கொள்வனவுசெய்து சேகரித்துவைத்துக்கொண்டனர். பல்பொருள் அங்காடிகளின் அடுக்குத் தட்டுக்கள் எல்லாம் வெறிச்சோடிக்கிடந்தன. இருப்பினும் புகலிடக் கோரிக்கையாளர்களிடம் அத்தியாவசிய உணவுப் பொருட்களான அரசி மற்றும் பருப்புவகைகளை கொள்வனவு செய்வதற்கு பணம் இருக்கவில்லை. விலை அதிகமான சிறிய கடைகளில் தங்கியிருக்காமல் பெரிய பல்பொருள் அங்காடிகளுக்குச் சென்று தொகையாக பொருட்களை வாங்குவதற்கு அவர்களிடம் போக்குவரத்து வசதியும் இல்லை. இந்த வைரஸ் தாக்கத்திற்கு முன்னரே இந்தக் குழுவினருக்கு உணவு மற்றும் பாதுகாப்பின்மை என்பது ஓர் பெரிள பிரச்சினையாக இருந்துவந்தது.

**Case Study - விடய ஆய்வு :**

T (ஆண் புகலிடக் கோரிக்கையாளர்):

*“எனக்கு 44 வயது. நான் 2016ம் ஆண்டு பிரித்தானியாவுக்கு வந்தேன். எனது மனைவியும் இரண்டு பிள்ளைகளும் இலங்கையில் உள்ளனர். இந்த முடக்க நிலைக்கு முன்னர், ITJP இன் வாராந்த கூட்டங்களில் மீதமாக இருக்கும் சோறு கறிகளை எடுத்துச் சென்று என்னால் உயிர் வாழமுடிந்தது. ICRC இடமிருந்தும் நான் உணவினைப் பெற்றுக்கொண்டேன். ஆனால் தற்போது முடக்க நிலை காரணமாக பயணம் செய்யமுடியாது என்பதால் அந்த உணவுப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளமுடியாது. தற்போது எனது உணவுக்கு பெரும் பிரச்சினையை சந்திக்கின்றேன். நான் நித்திரைக்கான மாத்திரைகளையும் மனச்சோர்வுக்கான மாத்திரைகளையும் எடுத்துவருகின்றேன். மேலும் ஒரு மாதத்திற்கான மாத்திரைகளைப் பெற்றுள்ளேன். இந்த மாத்திரைகள் முடிந்த பின்னர் நான் என்ன செய்வேன் என்பது எனக்குத் தெரியவில்லை. இணையவழி மூலமாக வழங்கப்படும் உளவளத்துணை எனக்கு மிகவும் உதவியாக உள்ளது. இதற்கு நான் மிகவும் நன்றியுடையவனாக உள்ளேன்.*

*இலங்கையிலுள்ள எனது மனைவி பிள்ளைகளுடன் தொடர்பில் இருக்க முடிகின்றது. ஆனால் சிலவேளை அந்த தொடர்பு துண்டிக்கப்படுகின்றது. இது எனக்கு ஏன் எனத் தெரியவில்லை. அவர்கள் எனக்கு மீண்டும் அழைப்பினை எடுக்கும் வரை நான் கவலையுடனும் பதட்டத்துடனும் இருப்பேன். பொதுவாக, அவர்கள் உடனும் தொலைபேசி அழைப்பினை மீண்டும் எடுக்கமாட்டார்கள். ஏனெனில், அவர்களின் தொலைபேசியிலுள்ள பணம் முடிந்தால் இலங்கையில் ஊரடங்கு நிலவுவதால் அவர்களால் உடனே வெளியில் சென்று அதனை வாங்கமுடியாது. அவர்கள் பண ரீதியிலும் சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். என்னால் அவர்களைப் பராமரிக்கமுடியாமல் அல்லது அவர்களுக்கு உதவ முடியாமல் இருப்பது எனக்கு மிகவும் கடினமாக உள்ளது. ஓர் சிறந்த வாழ்க்கைக்காகவே நான் இங்கு வந்தேன். ஆனால் நான் தற்போது எனது குடும்பத்துடன் இல்லை. இங்கு வசிப்பதற்கான உரிமை இல்லை. எனது வழக்கு எப்போது தொடரும் என்பது எனக்குத் தெரியாது. இந்த மனச் சுமை என்னை உடல் ரீதியாகப் பாதிக்கின்றது. நான் மிக மெதுமையாகவும் சோர்வாகவும் உள்ளேன். எனது அறையினை விட்டு வெளியே சென்று நடப்பது எனக்கு நல்லது எனக் கூறப்பட்டது. ஆனால் இந்த வைரஸ் காரணமாக எனக்கு அச்சமாக உள்ளது.*

*வேலை செய்வதற்கான அனுமதியை உள்விவகார அலுவலகத்திடம் நான் கேட்டுள்ளேன். போரில் ஏற்பட்ட காயத்தினால் எனது தோள்பட்டையில் உலோகத் துண்டு ஒன்று உள்ளபோதிலும் எனது கைகளில் பிரச்சினைகள் உள்ளபோதிலும் என்னால் வேலை செய்யமுடியும் என்று நான் நம்புகின்றேன்.*

*இந்த முடக்கநிலை என்னை மனரீதியில் பெரிதும் பாதிக்கின்றது. போரின் போது நான் பலவற்றைக் கண்டும் அனுபவித்தும் உள்ளேன். இறந்த உடலங்களும் இரத்தப்போக்குகளும் உணவு இல்லாமல் முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டதும் என் கண்முன்னே படங்களாகத் தோன்றுகின்றன. இரண்டு வருடங்களாக தடுப்புமுகாமிலும் சித்திரவதைக்குட்படுத்தப்பட்டேன். இந்த நினைவுகள் மீண்டும் தற்போது வருகின்றன.”*

**போதிய ஆதரவு இன்மை**

*“நான் அனேகமாக சாப்பிடுவதில்லை.”*

அண்மையில் பிரித்தானியாவுக்கு வந்த அனேகமான புகலிடக்கோரிக்கையாளர்கள் சமூக சேவைகளை அல்லது உதவிகளை நாடாமல், தமது உறவினர்களுடன் அல்லது குடும்ப நண்பர்களுடனேயே தங்கியுள்ளனர். அரசிடமிருந்து உதவி பெற்றுக்கொள்ளலாம் என்பது அவர்களுக்கு தெரியாது. அத்துடன் அவர்களால் விண்ணப்பப் படிவங்களை தாமாக நிரப்பவும் முடியாது. மொழிரீதியான தடை மற்றும் கலாச்சார இடைவெளி போன்றனவற்றால் உயிர் தப்பி வந்தவர்களால் தற்சார்பாக இருக்கமுடியாது.

குடும்பத்தவர்கள் இல்லை என்றால் இவரைப் போலவே அவர்கள் உணவு இன்றி அமைதியாக இருந்துவிடுகின்றனர்:

## Case Study:

**J** (ஆண் புகலிடக் கோரிக்கையாளர்):

*"2018 இல் நான் பிரித்தானியாவுக்கு வந்தேன். எனது அகதிக் கோரிக்கைக்கு இன்னும் பதில் வரவில்லை. நான் தனியாகவே இருக்கின்றேன். பொதுவாக நான் எனது தங்கை குடும்பத்துடன் வசித்துவருகின்றேன். ஆனால் அவர்கள் எல்லோரும் தற்போது வெளிநாட்டில் தடைப்பட்டு நிற்கின்றனர். அவர்கள் ஒரு வாரத்திற்கே சென்றிருந்தனர். ஆனால் தற்போது ஆறு வாரங்கள் ஆகிவிட்டன. வைரஸ் காரணமாக விமானப் பயணங்கள் தடை செய்யப்பட்டதால் அவர்களால் திரும்பிவரமுடியவில்லை.*

*எனது சகோதரியே எனது மருந்துகளை எடுத்துத் தருவார் - மனச் சோர்வு மற்றும் நித்திரைக்கான மாத்திரை. இப்போது இந்த மாத்திரைகள் முடிவடைந்துவிட்டன. அவற்றை எவ்வாறு பெற்றுக்கொள்வது என்பது எனக்குத் தெரியாது. இந்த மருந்துகள் இல்லாமல் என்னால் நித்திரை கொள்ளமுடியாது. எனக்கு ஆங்கிலம் பேசத் தெரியாது. இணையம் மூலமாக பொதுவைத்தியரை எவ்வாறு தொடர்புகொள்வது என்பதும் எனக்குத் தெரியாது.*

*இணையவழி மூலமான உளவளத்துணைக் குழுவில் பங்குகொள்ள முயற்சிக்கின்றேன். ஆனால் Wi-Fi பிரச்சினைகள் காரணமாக என்னால் ஒழுங்காக பங்குகொள்ள முடியவில்லை. வைரஸ் காரணமாக வெளியே போகவேண்டாம் என எனது சகோதரி கூறியுள்ளார். எனவே நான் வெளியில் போவதில்லை. வெளியே செல்ல எனக்குப் பயம். மின்சாரம் மற்றும் எரிவாயு பாவனைக்கான பணத்தினை நிரப்பீடுசெய்வதற்கு என்னிடம் பணமில்லை. அனேகமாக நான் சாப்பிடுவதில்லை.*

*என்னசெய்வது என்பது எனக்குத் தெரியவில்லை. எனது அகதிக் கோரிக்கை தொடர்பாக எந்த தகவலும் இல்லை. எனது சகோதரியும் அவரது பிள்ளைகளுமே எனக்கு உணர்வுரீதியில் ஆறுதலாக இருந்தனர். தற்போது ஒருவரும் இல்லை. அவர்கள் விரைவாகத் திரும்பி வருவார்கள் என நான் நம்புகின்றேன். ஆனால் எப்போது என்பதை எம்மால் உறுதியாகக் கூறமுடியாது.*

**தற்கொலை**

*"இது போன்ற ஒரு வாழ்க்கையை வாழ்வது பெறுமதியற்றது."*

இந்த வைரஸ் தாக்கத்திற்கு முன்னரேயே அண்மையில் வந்த சித்திரவதை மற்றும் பாலியல் வன்முறைக்குட்பட்டுத் தப்பி வந்தோர் பலர் தற்கொலை தொடர்பான எண்ணங்களை வெளிப்படுத்தியுள்ளனர். எங்களுடைய திட்டப் பணியில் NHS உளவள ஆலோசகர் ஒருவர் தொண்டராக உள்ளார். தமிழ் பேசும் இவர் உதவி வழங்குகின்றார். ஆனால் தேவை என்பது மிகப் பெரிதாகவே உள்ளது. பாலில் வல்லுறவிற்குட்பட்டுத் தப்பிவந்த இந்த யுவதியைப் போன்ற பலரது மனநிலை வீட்டினுள் முடங்கியிருப்பதால் மேலும் மோசமடைகின்றது. கோவிட்-19 தொற்று ஏற்பட்டதிலிருந்து, NHS இன் உளவள உதவியினைப் பெற்றுக்கொள்வதற்கான பட்டியலில் இடம்பிடித்தவர்களால் அதனைப் பெற்றுக்கொள்ளமுடியவில்லை.

## Case Study:

**S.** *(பெண்)*

*"இந்த வருடத் தொடக்கத்தில் தற்கொலை செய்துகொள்ள முயற்சித்தேன். தற்கொலை செய்ய முயற்சி செய்த பின்னர், உளவள சிகிச்சைப் பிரிவினால் சிகிச்சை வழங்கப்பட்டதுடன் தொடர் சிகிச்சை வழங்கப்படும் எனக் கூறப்பட்டது. எனது பொது வைத்தியரால் இந்தத் தொடர் சிகிச்சை பெற சிபார்சு செய்யப்பட்டுள்ளதால் நான் காத்திருக்கின்றேன். இந்த வருடம் இந்த சிகிச்சையினைப் பெற்றுக்கொள்வேன் என நான் நம்பிக்கொண்டிருந்தேன். ஆனால் வைரசின் தாக்கத்தினால் இது தாமதிக்கப்பட்டுள்ளது.*

*எனது வயது 21. 2019 இன் ஆரம்பத்தில் பிரித்தானியாவுக்கு வந்தேன். உள்விவகார அலுவலகத்தின் முதலாவது நேர்காணல் 2019 இன் ஆரம்பத்தில் இடம்பெற்றது. அதன் பின்னர் எந்தத் தகவலும் இல்லை. ஒரு கடிதம் கூட வரவில்லை. எனது அகதிக் கோரிக்கை விண்ணப்பத்தின் அடுத்த கட்டத்தினை நான் தொடரலாமா என்பது எனக்குத் தெரியவில்லை. இந்த வைரசானது எனது அகதிக் கோரிக்கையில் மேலும் தாமதத்தினை ஏற்படுத்துகின்றது.*

*இந்த முடக்கநிலைக்கு முன்னர், ITJP இன் வாராந்த ஒன்றுகூடல்களின் போது, வாரத்தில் ஒரு தடவை எனது சிநேகிதர்களைக் காண்பது ஆறுதலை ஏற்படுத்தியது. அவர்கள் எனக்கு ஆலோசனை வழங்கி உதவினார்கள். இது எனது மனச் சோர்விற்குப் பெரிதும் உதவியாக இருந்தது. இந்த ஒன்றுகூடலுக்குச் செல்லமுடியாமலிருப்பதால் நான் கவலையடைகின்றேன். எனது நண்பர்களையும் அவர்களின் உதவி-யையும் நான் தற்போது இழந்துள்ளேன்.*

*அடுத்த வருடம் நான் கல்வி கற்க விரும்புகின்றேன். ஆனால் இணையவழி மூலம் பதிவதற்கு எனக்கு அகதிப் பதிவு அட்டை வேண்டும். ஆனால் என்னிடம் அது இல்லை. இந்த அட்டை எனக்கு எப்போது வரும் என்பது எனக்குத் தெரியவில்லை. இணையவழி மூலமாக சில வகுப்புக்களில் கலந்துகொள்கின்றேன். ஆனால் கவனம் செலுத்துவது கடினமாக உள்ளது. கடந்த காலத்தில் எனக்கு இடம்பெற்றவை தொடர்பான நினைவுகள் தான் எனது மனதை நிறைத்துவைத்துள்ளன."*

**Case Study:**
**P (பெண்)**

*"எனது வயது 26. நான் 2018 இல் பிரித்தானியாவுக்கு வந்தேன். எனது அகதிக் கோரிக்கைக்கான வழக்கு மே மாதம் நடைபெற இருந்தது. ஆனால் வைரஸ் காரணமாக நிறுத்தப்பட்டுள்ளது. இணைய-வழி மூலமாக எனது வழக்கு நடைபெறும் என நான் தற்போது காத்திருக்கின்றேன். ஆனால் எப்போது நடைபெறும் என்பது எனக்குத் தெரியாது. அடுத்து என்ன நடக்கும் என்பதையிட்டு எனக்கு அச்சமாக உள்ளது. இந்தத் தாமதம் கால வரையறையற்றதாகக் காணப்படுவதுடன் எனது துன்பத்தையும் அதிகரிக்கின்றது. இயன்றளவு விரைவாக எனது வழக்கு முடிவுக்குவரவேண்டும் என நான் விரும்புகின்றேன்.*

*இலங்கையிலுள்ள எனது அம்மாவைப் பற்றியும் எனக்கு கவலையாக உள்ளது. எனது அம்மா இதய நோய்வாய்ப்பட்டவர். அத்தோடு வேறு கடுமையான வருத்தங்களும் எனது அம்மாவுக்கு உண்டு. அவருக்கு காய்ச்சல் ஏற்பட்டிருக்கின்றது. கடந்த இரு வாரங்களாக என்னால் அம்மாவுடன் பேசமு-டியவில்லை. வெளியில் சென்று சிநேகிதர்களைச் சந்திக்கும் போது எனக்கு ஆறுதலாக இருக்கும். அவர்களுடன் நிற்கும்போது எனது பிரச்சினைகளை மறந்திருப்பதற்கான ஒரு வாய்ப்பாக இருந்தது. தற்போது எனது வழக்கினைப் பற்றியும், கடந்த காலத்தில் எனக்கு நடந்தவை பற்றியும் எண்ணி கவலைகொள்வதிலேயே எனது நேரம் கழிகின்றது.*

*கடந்த இரு வாரங்களாக, தற்கொலை செய்வதற்கு கட்டடத்திலிருந்து குதிப்பது பற்றி அல்லது மாத்திரைகளை எடுத்துக்கொள்வது பற்றி யோசித்துக்கொண்டிருக்கின்றேன். வாழ்வதற்கான எனது மனோபலத்தினை இழந்துவருவதோடு மிகுந்த மனச்சோர்வுடன் இருக்கிறேன்."*

**தனிமை**

***"தனிமை என்னைக் கொல்லுகின்றது."***

உயிர் தப்பிவந்தவர்களுக்குப் பொதுவானதாக உள்ள கொடிய தனிமையும் புதிய நாடு ஒன்றில் இடம்பெயர்ந்திருக்கும் உணர்வும் சிறைப்படுத்தல் நடவடிக்கை மூலம் அதிகப்படுத்தப்படுகின்றது. இது கோவிட்-19 இனால் மோசமாக்கப்பட்ட மனநலப் பிரச்சினைகளும், அதனைவிட உதவி வழங்கும் அமைப்புக்கள் மற்றும் வலையமைப்புக்களின் தொடர்புகள் துண்டிக்கப்பட்டமையும் ஒன்றுசேர்ந்து விளைவுகளைப் பாரதூரமாக்கும்.

**Case Study:**
**M (ஆண் புகலிடக் கோரிக்கையாளர்)**

*"எனது வயது 33. நான் 2019 இல் பிரித்தானியாவுக்கு வந்தேன். லண்டனின் எனது சகோதரனின் குடும்பத்துடன் நான் வசித்துவந்தேன். ஆனால் அவர்களுக்கு வீடு தொடர்பில் பிரச்சினை ஏற்பட்டது. எனவே நான் வெளியேறவேண்டியேற்பட்டது. அவர்களும் அகதிகளாகவே உள்ளனர்.*

*நான் நியூகாசிலில் தனியாக இருக்கின்றேன். இங்கு எனக்கு யாரையும் தெரியாது. இங்கு எனக்கு யாரும் இல்லை. எனது அறையில் நான் முழு நேரமும் தனியாக இருக்கின்றேன். முடக்க நிலைக்கு*

*முன்னர், மாதத்தில் ஒரு தடவை லண்டனுக்குச் சென்று எனது சகோதரனைப் பார்ப்பேன். இனி என்னால் போகமுடியாது. சிலநேரங்களில் அவருடன் உரையாடுவேன். தனிமை என்னைக் கொல்லுகின்றது.*

*எவ்வாறு இந்தப் பிரச்சினைகள் முடிவுக்கு வரப்போகின்றன என்பது பற்றி யோசித்து கவலையடைவதிலேயே எனது நேரம் செலவழிகின்றது. எனது அகதிக் கோரிக்கைக்கும் முடிவு இன்னும் கிடைக்கவில்லை. நான் இங்கு வந்து விமான நிலையத்தில் புகலிடம் கோரியதற்குப் பின்னர் எந்தத் தகவலும் எனக்குக் கிடைக்கவில்லை. எவ்வித அரசாங்க உதவியினை பெற்றுக்கொள்ளலாம் என்பது எனக்குத் தெரியாது. எந்த உதவியினையும் பெற்றுக்கொள்ள எவ்வாறு விண்ணப்பிப்பது என்பதும் தெரியாது. என்னிடம் பணமும் இல்லை. இந்த அறையில் எவ்வளவு காலம் தங்கமுடியும் என்பதும் எனக்குத் தெரியாது.*

*தனிமையாகவும் ஒன்றுமில்லாமலும் வாழ்வதற்காக மட்டுமே பல்வேறு தடைகளைத் தாண்டி இந்த நாட்டுக்கு நான் வந்துள்ளேன். எனது பெற்றோரை, மனைவியை மற்றும் மகளையும் இலங்கையில் பிரிந்து வந்துள்ளேன். இப்படி ஒரு வாழ்க்கை வாழ்வதில் பெறுமதியே இல்லை. இந்தப் பிரச்சினைகளை அனுபவிப்பதை விட சாவதே மேல். இந்த வாழ்க்கையினை நான் வெறுக்கின்றேன். இந்த நாட்டில் ஓர் சிறந்த வாழ்க்கையினை நான் எதிர்பார்க்கின்றேன். வாழ்வதற்கான மன வலிமையை நான் இழந்துவிட்டேன்.*

*என்னால் நித்திரை கொள்ளமுடியவில்லை. பயமாக இருக்கின்றது. என்னை பராமரிப்பதற்கோ, சமைப்பதற்கோ அல்லது சாப்பிடுவதற்கோ விருப்பமுமில்லை. அத்துடன் தைரியமும் இல்லை. ஒரு தடவை சமைத்த உணவினை நான் பெற்றுக்கொண்டேன். அது எனக்குப் பெரிதும் உதவியது. இணையவழி மூலமாக வகுப்புக்கள் இடம்பெறும் போது நான் நன்றாக உணருவேன். ஆனால் அதன் பின்னர் கவலைகொள்வேன். எனக்கு அகதி அந்தஸ்து வழங்கப்படுமானால் எனது வாழ்க்கையை மகிழ்ச்சியாகக் கொண்டுசெல்லமுடியும்."*

**உதாசீனப்படுத்தும் சூழலில் மாட்டிக்கொண்டமை**

*"நான் மாட்டிவிட்டேன்."*

வைரஸ் தாக்கத்திற்கு முன்னரே, இந்த இளையவர்கள் தம்மை பராமரித்துவந்த குடும்பங்களால் பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கத் தொடங்கிவிட்டனர் என்பதை இந்தத் திட்டம் கண்டுகொண்டது. இந்தக் குடும்பங்கள் பண நெருக்கடியினால் இவர்களை சுமையாகக் கருதி சினம்கொள்ளத்தொடங்கிவிட்டனர். உயிர்தப்பி வந்தவர்களுக்கு உணவு வழங்குவது நிறுத்தப்பட்டமை, உடைகளைத் துவைக்காதமை அல்லது அவர்களுடைய அறையினை சூடாக்காத சம்பவங்கள் கூட உள்ளன. கோவிட்-19 மேலும் அழுத்தத்தினை ஏற்படுத்தி, பராமரிப்பு மேற்கொண்ட குடும்பங்கள் மேலதிகமாக ஒருவருக்கு உணவு வழங்க கடினப்படுகின்றனர். வெளிநாட்டில் தனியாக இருக்கும் ஏற்கவே சித்திரவதையினால் பெரிதும் பாதிக்கப்பட்ட ஒரு இளைஞருக்கு இத்தகைய நிராகரிப்பும் உணர்வுரீதியாக உதாசீனப்படுத்தப்படுவதும் பாரிய பாதிப்பை ஏற்படுத்தும்.

**Case Study:**
**S (ஆண் புகலிடக் கோரிக்கையாளர்)**

*"எனது வயது 28. 2018 இன் இலைதுளிர் காலத்தில் நான் பிரித்தானியாவுக்கு வந்தேன். நான் எனது மைத்துனியின் குடும்பத்தினருடன் வசிக்கின்றேன். அவரது கணவர் கோவிட்-19 இனால் தனது வேலையினை இழந்துவிட்டார். மேலும் என்னைப் பராமரிப்பது தமக்கு கடினம் என அவர்கள் என்னிடம் கூறிவிட்டனர். ஆனால் எனது பொது வைத்தியரிடமும் உள்விவகார அலுவலகத்திலும் இந்த முகவரியிலேயே பதிவு மேற்கொண்டிருப்பதால் எனக்கு வெளியேற விருப்பமில்லை. என்னைப் புண்படுத்தும் விதமாக என்னை நடத்துகின்றனர். ஆனால் நான் அவர்களிலேயே தங்கியிருக்கின்றேன். நான் இங்கிருந்து வெளியேறினால் வேறு இடத்தில் பதிவு செய்வதற்காக ஆவணங்களை வழங்குவது கடினமாக இருக்கும்.*

*வீட்டில் உள்ள இந்த நிலைமை என்னை மிகவும் பாதிக்கின்றது. எனக்கு அவர்கள் சூடாக்கியினை பயன்படுத்த அனுமதிப்பதில்லை. குளிர்நீரில் குளிக்கின்றேன். நான் மாட்டிக்கொண்டுவிட்டேன். எனது அகதிக் கோரிக்கைக்கு தீர்வு வரும்வரை என்னால் வெளியேறமுடியாது. ஆனால் நான் இங்கு வந்து இறங்கியபோது விமான நிலையத்தில் முதலாவது நேர்காணல் இடம்பெற்றபின்னர் உள்விவகார அலுவலகத்திடமிருந்து எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. எனது மனைவி இலங்கையில் சுகவீனமடைந்து இருக்கின்றார். எனது மனைவியை நினைத்தும் நான் கவலைப்படுகின்றேன்.*

*எனது அகதிக் கோரிக்கை வழக்கு முன்னோக்கிச் சென்றால் எனக்குப் பெரிய ஒரு மாற்றமாக இருக்கும். ஆனால் வைரஸ் தாக்கம் காரணமாக அனைத்து வழக்குகளும் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக எனக்குக் கூறப்பட்டுள்ளது. நான் மாட்டிக்கொண்டுவிட்டேன். நான் வசிக்கின்ற இடத்திலிருந்து வெளியேற எனக்குப் பயமாக இருக்கின்றது. வீட்டில் பிரச்சினையை ஏற்படுத்த நான் விரும்பாததால் இந்த தொலைபேசி அழைப்பினை எடுப்பதற்கு நான் வீட்டுக்கு வெளியே வரவேண்டியிருந்தது."*

**பின்னடைவு - முன்னேற்றம் இல்லை**

*"நான் மீண்டுவருவதற்கு ஐந்து வருடங்கள் எடுத்தன."*

சித்திரவதை மற்றும் பாலியல் வன்முறைக்குட்பட்டு பிரித்தானியாவுக்கு தப்பிவந்தவர்கள் இங்கு தமது வாழ்க்கையை சமாளிப்பதற்குப் பலவருடங்களாகப் போராடிக்கொண்டிருக்கின்றனர். இதிலிருந்து ஓரளவு மீளுவது அவர்களுக்கு இடர் நிறைந்ததாகவேயுள்ளது

## Case Study:
### T (பெண் புகலிடக் கோரிக்கையாளர்)

*"எனது வயது 41. நான் 2015 இல் பிரித்தானியாவுக்கு வந்தேன். எனது அகதிக் கோரிக்கைக்கு இன்னும் முடிவு கிடைக்கவில்லை.*

*நான் பிரித்தானியாவுக்கு வந்ததிலிருந்து கடந்த வருடம் வரை நான் வீட்டுக்குள்ளேயேதான் இருப்பேன். எனக்கு வெளியே போக விருப்பமிருப்பதில்லை. இலங்கையில் நான் அனுபவித்த பிரச்சினைகளால் ஏற்பட்ட எனது மனநிலையே இதற்கு காரணம். நான் இதிலிருந்து மீண்டு வாழ்க்கையைத் தொடர எனக்கு ஐந்து வருடங்கள் எடுத்தன. ஆனால் தற்போது கோவிட்-19 காரணமாக ஏற்பட்டுள்ள முடக்க நிலையினால் நான் மீண்டும் வீட்டுக்குள்ளேயே இருக்கவேண்டியிருக்கின்றது. எனது மனநிலை பின்னடையப்போகின்றது என நான் அச்சமடைகின்றேன். கடந்த வருடம் நான் ஓரளவு குணமடைந்து வந்ததால் எனது மாத்திரைகள் குறைக்கப்பட்டது. ஆனால் தற்போது எனது பொதுவைத்தியர் இதனை அதிகரிக்கவேண்டியிருந்தது. நான் நித்திரை இன்றி அவதிப்படுகின்றேன்.*

*நான் வெளியே செல்வதை பழக்கமாக்கியபோது கடந்த காலத்தைப் பற்றி சிந்திப்பதை நான் மறந்திருந்தேன். தற்போது நான் வீட்டில் முடங்கியிருப்பதால் எனது பழைய நினைவுகள் மீண்டும் வருகின்றன. இந்த முடக்க நிலை எனது உறவினரின் வருமானத்தைப் பாதித்துள்ளது. எனது மைத்துனி பிள்ளைகளைப் பராமரிக்க வேண்டும் என்பதால் வேலைக்குச் செல்லமுடியவில்லை. இந்த மாத முடிவுவரை வீட்டு வாடகை கட்டப்பட்டுள்ளது. அதன் பின்னர் என்ன நடக்கப்போகின்றது என்பது எனக்குத் தெரியவில்லை."*

**முடக்கம் : நிச்சயமற்ற எதிர்காலம் ஒன்றுக்கு முகம்கொடுத்தல்**

*"எனது அகதிக் கோரிக்கைக்கு முடிவு வரும்வரை எந்தவித உளவள ஆலோசனையும் எனது பிரச்சினைகளைத் தீர்க்காது."*

*"எனது வாழ்க்கை ஸ்தம்பித்துள்ளது. அதாவது எனது வாழ்க்கை முடங்கிப்போயுள்ளது என நான் உணர்கின்றேன்." பாதுகாப்பின்மை என்பது எனக்கு கவலையினையும் மனச்சோர்வினையும் ஏற்படுத்துகின்றது.*

குறிப்பாக, சித்திரவதை மற்றும் பாலியல் வன்முறைக்கு உட்பட்டு மன அதிர்ச்சியில் பாதிக்கப்பட்டிருப்போருக்கு உள்விவகார அலுவலகத்தின் முடிவுக்காக காத்திருக்கும் நேரம் துன்பகரமானது. தற்போது கோவிட்-19 தாக்கத்தின் காரணமாக, அகதிக் கோரிக்கை வழக்குகள் எல்லாம் எப்போது நடக்கும் எனத் தெரியாத நிலையில் இருக்கின்றது. கோவிட் 19 காரணமாக, உள்விவகார அலுவலகம் அகதிக் கோரிக்கையாளர்களின் நேர்காணல்களை ஒத்திவைத்துள்ளதுடன், நீதிமன்ற வழக்குகளும் ஒத்திப்போடப்பட்டுள்ளன. உயிர்தப்பி வந்தவர்களின் அகதிக் கோரிக்கை வழக்குகள் தற்போது நிலுவையில் உள்ளன. அகதிக் கோரிக்கைகள் மீதான கோவிட்-19 இன் தாக்கம் தப்பிவந்தவர்களுக்கு அதீத கவலையினையும் மன உளைச்சலினையும் ஏற்படுத்துகின்றது.

## Case Study:

## A (ஆண் புகலிடக் கோரிக்கையாளர்கள்)

*“நான் 2018 இல் பிரித்தானியாவுக்கு வந்தேன். எனது அகதிக் கோரிக்கை இன்னும் நிலுவையிலுள்ளது. நான் எனது சகோதரி குடும்பத்துடன் வசித்துவந்தேன். ஆனால் தற்போது எனது சகோதரியின் குடும்பம் நோய்வாய்ப்பட்ட பின்னர் நான் வெளியேறிவிட்டேன். அவர்கள் வைரஸ் தாக்கத்திற்குட்பட்டதாக சந்தேகிக்கப்பட்டனர். அவர்களின் குடும்பத்தை தனிமைப்படுத்துமாறு ஆலோசனை வழங்கப்பட்டது. எனக்கு வைரஸ் தாக்கமலிருப்பதற்காக நான் வெளியே அனுப்பப்பட்டேன்.*

*இதன் காரணமாக நான் கடந்த ஆறு வாரங்களாக தற்காலிக இடத்தில் வசித்துவருகின்றேன். இங்கு எனது தனிமையில் ஓர் பெரிய மாற்றத்தை கண்டுள்ளேன். இது எனக்குப் பெரிய பிரச்சினையாக உள்ளது. எனது அறையை விட்டு வெளியே வர எனக்குப் பயமாக உள்ளது. வாரத்தில் ஒரு நாள் அதாவது வீதியில் குறைந்தளவு மக்கள் நடமாட்டம் உள்ள ஞாயிற்றுக் கிழமையில், நான் வெளியே போய்வருவேன். இந்த இடத்தில் நான் தனியே உள்ளேன். எனது அறையினுள்ளேயே அனேகமான நேரம் இருப்பேன். ஏனைய அறைகளில் இருப்பவர்களை எனக்குத் தெரியாது. வைரஸ் தாக்கத்தின் பயம் காரணமாக, மற்றவர்களைக் காண்பது எல்லோருக்கும் பயம். இதனால் மற்றவர்களைக் காண்பதைத் தவிர்க்கின்றோம்.*

*நான் மிகவும் தனிமையாக உள்ளதை உணர்கின்றேன். வாராந்த உளவள திட்ட ஒன்றுகூடல்களில் கலந்துகொள்ளக்கூடியதாக இருந்தபோது நாம் ஓர் குடும்பமாக உணர்ந்தோம். அந்த உணர்வை, அந்த ஒன்றுகூடலை மற்றும் அந்த உணவை தற்போது இழந்துநிற்கின்றோம். இது எனது வாழ்க்கையில் ஓர் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. ஒவ்வொரு ஒன்றுகூடலுக்குப் பின்னரும் அடுத்த ஒன்றுகூடலுக்கான நாட்களை எண்ணத்தொடங்கிவிடுவேன்.*

*உணவு ஓர் பிரச்சினையாக உள்ளது. எனது தற்காலிக தங்குமிடம் ஓர் கடைக்கு மேல் உள்ளது. வைரஸ் காரணமாக அந்தக் கடை தற்போது பூட்டியிருக்கின்றது. இதன் காரணமாக, இந்தத் திட்டத்தினால் எனக்கு அனுப்பப்படும் உணவு மற்றும் மரக்கறிப் பெட்டிகளைப் பெற்றுக்கொள்ளமுடியவில்லை.*

*என்னுடைய நிலைமைக்குரிய தீர்வு கிடைக்காமல், எவ்வளவு உளவள ஆலோசனையினை நான் பெற்றுக்கொண்டாலும் அது உதவியாக இருக்காது. இலங்கையிலுள்ள எனது குடும்பத்தினர், இந்த நாட்டில் எனக்குள்ள பிரச்சினைகள், எனது அகதிக் கோரிக்கை நிலுவையிருக்கின்றமை மற்றும் எனது தற்காலிக வதிவிடத்தில் உள்ள பிரச்சினைகள் எல்லாவற்றினையும் என்னுடைய நிலமை உள்ளடக்குகின்றது. எனது அகதிக் கோரிக்கைக்கு முடிவு கிடைக்கும்வரை எந்தவித உளவள ஆலே-ாசனையும் இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்காது. எனது வாழ்க்கை ஸ்தம்பித்துப்போய் உள்ளது. அதாவது எனது வாழ்க்கை முடங்கிப்போயுள்ளது. பாதுகாப்பின்மை என்பது எனக்கு மிகுந்த கவலையையும் மனச் சோர்வினையும் ஏற்படுத்துகின்றது. தற்போது தனிமை என்பது எனக்குப் பெரிய பிரச்சினையாக உள்ளது. ”*

**அகதிகள்**

*“கோவிட்-19 முடக்கநிலையினால் எனது சந்தோசம் குறைக்கப்பட்டுவிட்டது.”*

கடுமையான போராட்டத்தின் பின்னர் அகதி அந்தஸ்தினைப் பெற்றுக்கொண்டவர்களும் கோவிட்-19 இன் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த இரண்டு மாதங்களில் தம்மை சமாளிக்கக்கூடியதாக மாறியும் மீண்டும் தேவைகளுக்கு முகம்கொடுத்த உயிர்பிழைத்து வந்தவர்களும் இந்தத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டனர். அகதித் தஞ்சத்தினைப் பெற்றுக்கொள்வதற்காகவும் அதன் பின்னர் தமது குடும்பத்தினருடன் மீளிணைந்து கொள்வதற்காகவும் ஆண்டுகளாகக் காத்திருந்தவர்களுக்கு இந்த வைரஸ் அவர்களின் வாழ்க்கையை செயலிழந்த ஓர் புதிய நிலைக்குத் தள்ளியுள்ளது.

## Case Study:

## S (அகதி அந்தஸ்துப் பெற்றுக்கொண்டவர், ஆண், குடும்பம் இலங்கையில் உள்ளது)

*“எனது வயது 35. நான் 2016 இல் பிரித்தானியாவுக்கு வந்தேன். இந்த வருடம் பெப்ரவரி மாதம் எனக்கு அகதி அந்தஸ்து கிடைத்தது. ஆனால் கோவிட் -19 முடக்க நிலையினால் எனது சந்தோசம் குறைக்கப்பட்டுவிட்டது. அடுத்த கட்டமாக எனது மனைவியையும் மகளையும் இங்கு அழைப்பது*

*ஸ்தம்பித்துப்போயுள்ளது. நான் இலங்கையிலிருந்து வெளியேறும் போது மகள் ஆறு மாதக் குழந்தை. அதிலிருந்து நான் அவளை இன்னும் பார்க்கவில்லை. அவளுக்கு என்னை ஞாபகமிருக்காது என்பதையும் அவள் என்னுடன் சேர விரும்பமாட்டள் என்பதையும் நினைக்க எனக்குப் பயமாக இருக்கின்றது. மூன்று வாரங்களாக நான் வீட்டுக்கு வெளியே செல்லவில்லை. வெளியில் போகமுடியாமலிருப்பதையிட்டு எனக்கு மன அழுத்தமாகவும் கவலையாகவும் கோபமாகவும் இருக்கின்றது. இலங்கையில் நான் சிறையில் இருந்ததைப் போல் நான் உணர்கின்றேன். இது நினைவுகளை மீளக் கொண்டுவருகின்றது. முன்னர் வீட்டுக்கு வெளியே சிநேகிதர்களை சந்திக்க முடிந்ததால் ஒரு ஆறுதலாக இருந்தது. அவர்களும் சிலவேளை எனக்குப் பொருட்கள் வாங்கித் தருவார்கள். தற்போது இந்த முடக்கநிலை காரணமாக அவர்களை நான் காண்பதில்லை. பொருட்கள் வாங்கி நான் இருக்கும் வீட்டுக் காரருக்கு வழங்க என்னிடம் பணம் இல்லை. அகதியாக என்னால் அரசாங்க உதவியினைப் பெற்றுக்கொள்ள விண்ணப்பிக்கமுடியும். ஆனால் நான் வதிவிட அட்டையினை இன்னும் பெற்றுக்கொள்ளவில்லை. இதனை எப்போது பெற்றுக்கொள்வேன் என்பது எனக்குத் தெரியாது. இந்த வைரஸ் காரணமாக அது தாமதமாகியுள்ளது."*

### Case Study:

#### T (அகதி அந்தஸ்து பெற்றுக்கொண்டவர், தனியான தாய்)

*எனது வயது 39. எனக்கு 11 வயதுடைய மகன் ஒருவர் உள்ளார். நான் தனியாக உள்ள தாய். நான் 2017 இல் பிரித்தானியாவுக்கு வந்தேன். ஏப்ரல் 2018 இல் எனக்கு அகதி அந்தஸ்து கிடைத்தது. முடக்க நிலைக்கு முன்னர் நான் வேலை செய்துகொண்டிருந்தேன். எனக்கு காய்ச்சல் வந்ததால் வேலைக்குப் போவதை நிறுத்திவிட்டேன். எனது உடல் வெப்பநிலை எத்தனை பாகையில் இருந்தது என்பதை என்னால் கூறமுடியாது. என்னிடம் வீட்டில் வெப்பமானி இருக்கவில்லை. எனக்கு கோவிட்-19 தான் தாக்கியிருக்கும் என நான் சந்தேகிக்கின்றேன். ஆனால் பொதுவைத்தியரிடம் செல்வதற்கு எனக்கு வீட்டைவிட்டு வெளியேறப் பயமாக இருந்தது. எனது ஆங்கில அறிவு போதாமையால் இணையத்தளம் ஊடாக வைத்தியர் சந்திப்பினை ஏற்பாடு செய்வது எனக்கு கடினமாக இருந்தது. பொதுப் போக்குவரத்தினைப் பயன்படுத்துவதற்கு என்னிடம் முகக் கவசம் இருக்கவில்லை. இந்த முடக்கநிலையினால் எனது மகன் பாடசாலை போகவில்லை என்பது எனக்கு மிகப் பெரிய சவாலாக இருக்கின்றது. படிக்குமாறு அவரை என்னால் வற்புறுத்தமுடியாது. அவரது எதிர்காலம் பற்றி நான் பெரிதும் கவலைப்படுகின்றேன். இது எனக்கு மன அழுத்தத்தினையும் கவலையினையும் ஏற்படுத்துகின்றது.*

### Case Study:

#### T (அகதி அந்தஸ்து பெற்றுக்கொண்டு குடும்பத்துடன் மீளிணைந்து கொண்டவர்)

*நான் 2014 இல் பிரித்தானியாவுக்கு வந்தேன். 2018 இல் எனக்கு அகதி அந்தஸ்து கிடைத்தது. எனது குடும்பத்தினர் (இரு ஆண்பிள்ளைகள் மற்றும் மனைவி) 2019 இல் இங்கு வந்தனர். முடக்க நிலை காரணமாக எமக்கு வாழ்க்கை முடங்கிவிட்டது. எம்மால் ஒன்றும் செய்யமுடியாது. எனது பிள்ளைகளின் பாடசாலைப் படிப்பும் (5,10) உண்மையில் இந்த முடக்க நிலையினால் பாதிக்கப்பட்டுவிட்டது. அவர்களுக்கு பெருந்தொகையான வீட்டுப்பாடங்கள் வழங்கப்படுகின்றன. எம்மிடம் உதவி கோருவார்கள். ஆனால் எம்மால் முடியாது. எனது மனைவிக்கோ அல்லது எனக்கோ ஆங்கில அறிவு இல்லை. எங்களிடம் மடிக்கணினிகள் இல்லாதமையால் இணைய வழி வகுப்புக்களில் கலந்துகொள்ளமுடியவில்லை. எம்மாலும் அதனை வாங்க முடியவில்லை. எனது ஐந்து வயது நிரம்பிய மகன் அவசர சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்படவேண்டியிருந்தது. தற்போது வைத்தியாலையிலிருந்து விடப்பட்டுள்ளார். ஆனால் உண்மையில் அவர் வைத்தியசாலையிலேயே தற்போதும் இருக்கவேண்டியவர். வைரசிலிருந்து பாதுகாக்கப்படவும் நோயாளர் கட்டிலை வேறு நோயாளருக்குப் பயன்படுத்துவதற்காகவுமே எனது மகன் வைத்தியசாலையிலிருந்து வெளியே விடப்பட்டார். மருத்துவர்கள் எமது வீட்டுக்கு வந்து சிகிச்சை வழங்கினர். அவர்களுக்கு நாம் பெரிதும் நன்றியுடையவர்கள். எம்மிடம் கட்டில்கள் இல்லாதமையால் நாம் நிலத்திலேயே போர்வைகளை விரித்துப் படுக்கின்றோம். எனது மகன் கட்டிலில் படுக்கவேண்டும் என மருத்துவர்கள் கூறுகின்றனர். ஆனால் மகனுக்கு கட்டில் வாங்குவதற்கு எம்மிடம் பணம் இல்லை.*

## முடிவுகளும் பகுப்பாய்வும்

உயிர்பிழைத்து வந்தவர்களால் முகம்கொடுக்கப்பட்ட பிரச்சினைகளை கோவிட்-19 எவ்வாறு அதிகரித்துள்ளது என்பதை இந்த ஆய்வு வெளிப்படுத்துகின்றது: பசி, தற்கொலை எண்ணம், தனிமை, மீள்-அதிர்ச்சியடைதல், பயம், பஞ்சம், விரோதமான வாழ்க்கைச் சூழல், உதவியின்மை மற்றும் அகதிக்

கோரிக்கை வழக்குகள் தாமதிக்கப்பட்டிருப்பதால் ஏற்பட்டிருக்கும் நிச்சயமற்ற எதிர்காலம் தொடர்பான விரக்தி போன்றன. இந்தப் பிரச்சினைகள் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவை என்பதையும் இந்த ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன. ஏதிலிகளாக வாழும் உயிர்பிழைத்துத் தப்பிவந்தவர்கள் அரைகுறையாகக் கட்டியெழுப்பியுள்ள பலவீனமான வாழ்க்கையினை சிதறடிக்கும் பந்தாக கோவிட் -19 உள்ளது.

**அதிகரிக்கும் மனநலப் பிரச்சினை**

கோவிட்-19 இனைக் கட்டுப்படுத்துவதற்காகப் போடப்பட்டுள்ள கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் உயிர்தப்பி வந்தவர்களின் நலத்திற்கு மோசமான பாதிப்பினை ஏற்படுத்துவதுடன் அவர்களின் உள ஆரோக்கியப் பிரச்சினைகளையும் கடுமையாக அதிகரிக்கின்றன. தொற்றுநோயினால் ஏற்படுத்தப்பட்ட அச்சமும் அது அவர்களின் எதிர்காலம் தொடர்பில் ஏற்படுத்தியிருக்கும் நிச்சயமற்றதன்மையும் இதற்கு காரணமாகின்றன. எவ்வளவு காலம் இந்த முடக்க நிலை நீடிக்கும்? இலங்கையில் எனது குடும்பம் பாதுகாப்பாக உள்ளதா? எனக்கு உணவு இல்லாமல் போகுமா? என்னைப் பராமரிப்பவர்களுக்கு வேலையில்லாமல் போய் அவர்களால் எனக்கு உணவு வழங்க முடியாது போனால் நான் எங்கு வாழ்வேன்? இவற்றுக்கும் அப்பால், பிரித்தானியாவில் தமது வதிவிட அந்தஸ்து தொடர்பாக உறுதிப்பாடின்மை மற்றும் ஆபத்திலிருந்து தப்பிவெளியேறிய நாட்டுக்கு மீண்டும் அனுப்பப்படுவோமா என்ற அதிகரித்த பயம் போன்ற கவலைகள் மேலோங்கிக் காணப்படுகின்றன.

இந்த ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்கள் தமது உயிருக்குப் பயந்து இலங்கையிலிருந்து தப்பிவந்தவர்கள். இவர்கள் எதற்காக குடும்பங்களை விட்டு இங்கு வந்தார்களோ அதனை கோவிட்-19 பறித்துவிட்டது - பாதுகாப்பு உணர்வு. அத்துடன் எந்தக் காரணம் அவர்களை நாட்டைவிட்டு வெளியேற நிர்ப்பந்தித்ததோ அதனை மீள்நிரப்பீடு செய்துள்ளது - பயம். நேர்காணல் மேற்கொள்ளப்பட்ட அனேகமான தப்பிவந்தவர்கள் கோவிட்-19 தொடர்பில் கடுமையான பயத்தினை வெளிப்படுத்தினர்:

*“இலங்கையில் போர் நடைபெற்றபோது எமது உயிரைப் பாதுகாக்க ஓடினோம். இப்போது அதே சூழ்நிலை... மீண்டும் உயிருக்குப் பயந்து வாழ்கின்றோம்.”*

*“முதலில் இலங்கை இராணுவம் எம்மைத் துரத்தியது. தற்போது வைரஸ் துரத்துகின்றது.”*

கோவிட்-19 காரணமாக இறப்பவர்களின் தொகை பிரித்தானியாவில் அதிகரிப்பதால் இவர்கள் மத்தியில் கவலைகள் அதிகரித்துக் காணப்படுவதுடன் இவர்களிடம் ஏற்கனவே இருந்த மன அதிர்ச்சி மற்றும் மன நலப் பிரச்சினைகளும் மேலும் மோசமாகின்றன. சிறையிலிருப்பது போன்ற கட்டுப்பாடானது அவர்களுக்கு பழைய சித்திரவதை, பாலியல் வன்முறை மற்றும் தடுப்பு போன்ற நினைவுகளை ஏற்படுத்தி மீண்டும் அதிர்ச்சிக்குள்ளாக்குகின்றது. தனிமை, கவலை, நித்திரையின்மை, தற்கொலை எண்ணம், மனச் சோர்வு, ஊக்கமிழப்பு, பசியின்மை மற்றும் மோசமாக செயலற்றுப்போதல், தன்னையே பராமரிக்கமுடியாது போதல் போன்ற மன நல ஆரோக்கியம் தொடர்பான முறைப்பாடுகளில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக அவர்களின் உளவள ஆலோசகர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

உயிரைப் பாதுகாக்கும் பராமரிப்பையும் மனநல ஆதரவையும் பெற்றுக்கொள்வதற்கான இவர்களின் வழிவகைகள் இந்தத் தொற்றுநோயால் பெரிதும் சீர்குலைந்துள்ளன. மீண்டெழுதல் என்பது இன்னும் பின்தள்ளப்படுகின்றது. மனநல ஆரோக்கிய சேவைகளுக்கான தேவையில் திடீர் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளமையும் இந்த சேவை வழங்கலில் ஏற்பட்டுள்ள சடுதியான வீழ்ச்சியும் சேர்ந்து உயிர் ஆபத்தினை ஏற்படுத்தக்கூடும்.

இவர்களின் உயிர் நாடியாக இருந்த சக நண்பர்களுடன் மேற்கொள்ளப்பட்டுவந்த வாராந்த ஒன்றுகூடலும் இடைநிறுத்தப்பட்டுவிட்டது. அங்கே அவர்கள் ஆங்கில வகுப்பு குழுரீதியான உளவள ஆலோசனை வழங்குதல், சிகிச்சை முறையிலான கலை வகுப்புக்கள் போன்றவற்றில் கலந்துகொள்வதுடன் நண்பர்களுடன் உணவினையும் பரிமாறிக்கொள்வர். நட்புறவு, சிரிப்பு மற்றும் வீட்டு (இலங்கை) உணவினைப் பெற்றுக்கொள்ள பலருக்கு இந்த வாய்ப்பு மட்டுமே ஒரேயொரு மூலமாக இருந்தது. இந்த ஆதரவு மற்றும் தமது சகாக்களுடனான தொடர்பு துண்டிக்கப்பட்டமையானது பலருக்கு தனிமை உணர்வினை ஏற்படுத்தியுள்ளது என்பதுடன் அவர்கள் உணர்வுரீதியாகவும் கடும் போராட்டத்திற்கு முகம்கொடுக்கின்றனர். அவர்களைப் பாராமரிக்கும் குடும்பத்தவர்கள் உணவு மற்றும் தங்குமிடத்தினை வழங்குகின்ற அதேவேளை பலருக்கு அத்தியாவசியமாக உள்ள உளவள ஆதரவினை வழங்குவதில்லை. குறிப்பாக பாலியல் வன்முறை போன்ற பாரதூரமான மனித உரிமை மீறல்களைப் போன்று இந்த சம்பவங்களும் வெட்கம், கௌரவக்குறைவு, மற்றும் சுமையாக இருக்க விரும்பாமை போன்ற பல்வேறு காரணங்களுக்காக தப்பிப் பிழைத்தவர்களுக்கு நெருக்கமானவர்களிடம் மறைக்கப்பட்டுள்ளன.

**வறுமையும் பட்டினியும்**

இவர்கள் அனேகமானவர்களிடம் சேமிப்போ, வருமான மூலமோ, வங்கிக் கணக்கோ, கடன் அட்டைகளோ அல்லது நிரந்தர முகவரியோ இல்லை. அவர்களுடைய அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குக் கூட அவர்களிடம் போதிய பணம் இல்லை. பெண்களைப் பொறுத்தவரையில், அவர்கள் தம்மிடம் சுகாதார ரீதியிலான பொருட்களை வாங்குவதற்கே பணம் இல்லை எனக் கூறுகின்றனர். தம்மிடம் குறைந்தளவு உணவுப் பொருட்களே தற்போது உள்ளது என்றும் எனவே இனிமேல் உணவு பரிமாறப்படமாட்டாது என்றும் பராமரிப்பாளர் ஒருவர் உயிர்பிழைத்து தப்பிவந்த ஒருவருக்கு கூறப்பட்ட சம்பவமும் ஒன்று உள்ளது. பொதுவில், நிலமை நம்பிக்கையற்றதாகவே காணப்படுகின்றது; இந்த புகலிடம் கோருபவர்கள் உணவு மற்றும் ஏனைய தேவைகளுக்கு இடையில் எதை தெரிவு செய்வதென்று தெரியாத நிலைக்கு நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். குறைந்தளவானோரே (62 பேரில் 6 பேர் மட்டும்) அகதிகளுக்கான கொடுப்பனவைப் பெற்றுக்கொள்கின்றனர். இது வாராந்தமே வழங்கப்படுகின்றது. எனவே சமூக இடைவெளி தொடர்பான வழிகாட்டல்களுக்கு அமைய போதிய உணவுப் பொருட்களையும் ஏனைய அத்தியாவசிய பொருட்களையும் வாங்குவது அவர்களுக்கு கடினமாக உள்ளது. இவர்களில் 50 பேருக்கு வாராந்தம் இந்தத் திட்டத்தினால் உணவுப் பெட்டிகள் அனுப்பப்படுகின்றன. உணவுக்கான உத்தரவுகள் ஒழுங்கு செய்யப்படுகின்றபோதுகூட அதனை விநியோகிப்பதில் சிக்கல்கள் காணப்படுகின்றன. ஏனெனில் சிலர் வசிக்கும் வீட்டில் அவற்றைப் பெற்றுக்கொள்ளமுடியாது அல்லது சிலர் பூட்டப்பட்டிருக்கும் கடைகளுக்கு மேல் உள்ளனர்.

**விரோத வாழ்வு நிலமைகள்**

பலர் தமது சிநேகிதர்களுடன் அல்லது சிநேகிதர்களின் சிநேகிதர்களுடன் அல்லது உறவினர்களின் சிநேகிதர்களுடன் வசிக்கின்றனர். குறைந்தளவான சிலர் மட்டுமே உறவினர்களுடன் வசிக்கின்றனர். அனேகமானவர்கள் பிரச்சினையான பாதுகாப்பற்ற சூழலிலேயே வாழ்கின்றனர். அவர்கள் தரம் குறைந்த நெரிசலான தங்குமிடத்திலேயே வாழ்கின்றனர். முடக்கநிலை காரணமாக எல்லோரும் வீட்டுக்குள்ளேயே முடங்கியிருப்பதால் மேலும் மன அழுத்தத்தினையும் கவலையினையும் ஏற்படுத்துவதாக உள்ளது. சிலர் கோவிட்-19 தொடர்பான பயத்தினால் பராமரிப்பாளர்கள் போடும் மேலதிக கட்டுப்பாடுகளுக்கு முகம்கொடுக்கின்றனர். முழுமையாகவே அவர்கள் வீட்டிலிருந்து வெளியில் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. வீட்டினுள்ளே அறையினுள் நாளாந்தம் 24 மணி நேரங்களும் இருக்குமாறு அவர்கள் கட்டாயப்படுத்தப்படுகின்றனர்.

*"நான் இலங்கையில் மீண்டும் சிறையில் இருப்பதைப் போன்று உணர்கின்றேன்."*

பலர் குடும்பங்களால் பராமரிக்கப்படுகின்றனர். அந்தக் குடும்பங்கள் தற்போது தொற்றுநோய் காரணமாக ஏற்படுத்தப்பட்ட கட்டுப்பாடுகளின் விளைவால் வேலையின்மைக்கு அல்லது வேலைக் குறைப்புக்கு முகம்கொடுத்துள்ளதால் நிதி நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்து வருகின்றன. இத்தகைய தங்குமிடங்கள் தற்காலிகமானதாகவே இருந்திருக்கும். ஆனால் அவர்களின் அகதிக் கோரிக்கை தொடர்பில் கோவிட்-19 காரணமாக ஏற்படுத்தப்பட்ட தாமதங்களும் சமூகப் பாதுகாப்புக்காக அவர்கள் மேற்கொண்டிருக்கும் விண்ணப்பங்களும் இனிவரும் மாதங்களில் அவர்கள் அதிகளவிலான பாதிப்புக்களுக்கும் ஸ்திரமற்ற ஆதரவுச் சூழலுக்கும் முகம்கொடுக்கப்போகின்றனர் என்பதைக் குறித்துக்காட்டுகின்றன. அவர்களுக்கான வரவேற்பு முடிவுறுகின்றது. குடும்பங்கள் ஒருவரை ஒருவர் பராமரிக்கமுடியாத நிலையில் உள்ளன. சமூகத்திலுள்ள பலவீனமுற்றிருக்கும் உதவி வழங்கும் அமைப்புக்கள் மற்றும் சமூகப் பரஸ்பர உறவுக் கட்டமைப்புக்கள் சரிவடைந்து செல்கின்றன.

## உதவி வழங்குவதற்கான தலையீடுகள்

மார்ச் 2020 இல், ஒவ்வொரு வாரமும் அண்ணளவாக 30 பேருக்கு இந்தத் திட்டம் உதவிசெய்துகொண்டிருந்தது. வைரசின் தாக்கத்தினால் தற்போது இந்த எண்ணிக்கை இரட்டிப்பை விட அதிகமாகியுள்ளது. இந்தத் திட்டத்தின் தலையீட்டினால் முகம்கொடுக்கப்படும் நடைமுறைச்சாவல்கள் சிலவற்றின் அழுத்தங்களை இல்லாமல் செய்யலாம். உயிர்பிழைத்து வந்தவர்களைத் திடப்படுத்தி உயிர்களைக் காக்கலாம்:

**கலைத்தல்** : இந்த வைரஸ் தொடர்பான செய்திகளால் இந்தத் திட்டத்தை எவ்வாறு தொடர்ந்துசெல்வது என்பது ஆரம்பத்தில் போராட்டமாக இருந்தது. குழுவின் நேரடியான கூட்டங்களை எப்போது நிறுத்தவேண்டும் என்பது பற்றிக்கூட தெளிவான வழிகாட்டல்கள் இருக்கவில்லை. அரசாங்கத்தின் கட்டுப்பாடுகள் அமுலுக்கு வருவதற்கு சற்று முன்னர், மார்ச் மாத நடுப்பகுதியில்

எந்தவித திட்டமிடலும் இல்லாமல் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. கடைசி ஒன்றுகூடலில் பயனாளிகளிடம் அவர்கள் எவ்விதமான ஒன்லைன் தொடர்பாடல்களை பயன்படுத்துகின்றனர் என்பதைக் கண்டறிவதில் செலவிடப்பட்டது - வட்ஸ்அப், ஸ்கைப், வைபர் போன்றவை. முன்னேற்பாடாக, ஒரு தெரிவுசெய்யப்பட்ட ஒன்லைன் தளத்தினைப் பயன்படுத்த அவர்களுக்கு கற்பிக்கப்பட்டதில் அல்லது புதிய சிம் காட்டுகளையும் அவசரகால பண உதவியினை வழங்குவதிலும் நேரம் நன்கு செலவுசெய்யப்பட்டிருக்கவேண்டும். பணியாளர்கள் கையுறைகளையும் முகக் கவசங்களையும் கொள்வனவு செய்து இறுதி நாள் அன்று அவர்களுக்கு வழங்கக்கூடியதாக இருந்தது.

**ஒன்லைனுக்கு மாற்றம்:** இந்தத் திட்டத்தினை ஒன்லைனுக்கு மாற்றுவதில் நிர்வாகச் செலவு வியத்தகு அளவில் அதிகரித்தது மட்டுமல்லாமல் தொடரான பல்வேறு தடைகளையும் ஏற்படுத்தியது. தமது சொந்தப் பிரச்சினைகளை சமாளித்துச் செல்லக் கூடியதாக இருந்த அண்மையில் அகதி அந்தஸ்த்து பெற்ற தமிழ் பணியாளர்கள் இள வயதுப் பிள்ளைகளை வீட்டில் விட்டுவிட்டுகூட, இந்தத் திட்டத்தினை தொடர்ந்துசெல்வதற்கு மேலதிக நேரங்கள் பணிபுரிந்தனர். உயிர் பிழைத்துவந்தவர்களின் தொலைபேசி அழைப்புக்களுக்கு இரவு பகல் எல்லாம் பதிலளித்தனர். உளவள ஆலோசனை வழங்குபவர் தனது வீட்டுக்கே ஒருவரை அழைத்துச்செல்ல முன்வந்தார். தப்பிவந்தவர்கள் சிலரிடம் ஒன்லைன் பாவனைக்கேற்ற தொலைபேசி இல்லை என்பதும் ஏனைவர்களுக்கு Wi-Fi அல்லது போதிய mobile data இல்லை என்பதும் பணியாளர்களால் கண்டிறியப்பட்டது. தப்பி வந்தவர்கள் ஒன்லைனில் ஆதரவினைப் பெற்று தொடர்பில் இருப்பதற்கு தொலைபேசிகளும் Wi-Fi அல்லது data போன்றன இன்றியமையாதவை. மொபைல் டேற்றாவினை அல்லது கிறடிற்றினை பெற்றுக்கொள்ள முடியாது என்பதால் அனேகமானோர் இலவச Wi-Fi இலேயே தங்கியிருந்தனர். இருப்பினும் முடக்க நிலைக் கட்டுப்பாடுகளும் இதற்கு அனுமதிக்கவில்லை. 22 பேருக்கு மீள்திருத்தம் செய்யப்பட்ட ஸ்மாட் தொலைபேசிகள் மற்றும் சிம் அட்டைகளையும் அல்லது புதிய mobile data packages இனையும் கொள்வனவுசெய்வதற்கு இத் திட்டம் தனிப்பட்டவர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட நன்கொடைகளைப் பயன்படுத்தியது. தொலைபேசி சேவை வழங்குனர் ஒருவர் ஒன்பது பேருக்கான தொலைபேசி data கணக்கினை ஒரு மாதத்திற்குப் புதுப்பித்து வழங்கியிருந்தார். ஆனால் அது முடிவுற்றதும் அவர்களுக்கு data இருக்கவில்லை.

குழு மற்றும் தனிநபர் உளவள ஆலோசனை, சிகிச்சைமுறையிலான கலை வகுப்பு மற்றும் ஆங்கில வகுப்புக்கள் ஒன்லைனுக்கு மாற்றப்பட்டன. ஆனால் அனேகமானோர் புதிய தொழிநுட்பத்தினைப் பயன்படுத்த பெரிதும் கடினப்பட்டனர். இந்த வழிமுறை வேலைசெய்யத்தொடங்கியதும், ஒன்லைன் ஒன்றுகூடல்களால் மீண்டும் ஒருவரை ஒருவர் காண்பதற்கு வழிவகுத்து அவர்களின் மகிழ்ச்சியைத் தூண்டியது. இதன் விளைவாக, இவர்கள் தமிழில் உரையாடி தமது தனிமை உணர்விலிருந்து விடுபட இந்தத் திட்டம் சமூக நிகழ்வுகளை ஒன்லைன் மூலமாக நடத்தியது. தப்பிவந்தவர்கள் தாம் தனிமையாக இல்லை என்று உணரவைப்பதற்கும் அவர்களுடன் தொடர்பில் இருப்பதற்கும் தொடர்ச்சியான ஆதரவு இன்றியமையாததாகும்.

*“ ஒன்லைன் மூலமான வகுப்புக்கள் மூன்று நாட்களுக்கு நடைபெறுவதால் எனக்கு ஓர் பெரிய மாற்றத்தை ஏற்படுத்துகின்றது. இந்த நாட்களில் எதிர்பார்த்திருக்க ஏதேனும் ஒன்று எனக்கு இருக்கின்றது. நேரடியாக வகுப்பில் கலந்துகொள்ளமுடிந்தபோது இதனை கிழமை முழுக்க எதிர்பார்த்திருந்தேன். எனது சிநேகிதர்களுடன் செலவழித்த நேரத்தில் கிடைத்த நினைவுகளும் சிந்தனைகளும் அடுத்த வகுப்புவரை எனது சிந்தனைகளை நிறைத்திருக்கும்.”*

**பராமரிப்புப் பொதிகள்:** தபால் சேவை தொடர்ந்து நடைபெறுவதை இந்தத் திட்டம் விரைவாக அறிந்துகொண்டது. இந்தத் திட்டம் நேரடியான கூட்டங்களை நிறுத்தப்போகின்றது என்பது பற்றி இவர்கள் வெளிப்படுத்திய அதிர்ச்சி உணர்வினைக் குறைப்பதற்கு பராமரிப்புப் பொதிகளும் (அல்லது தப்பிவந்த ஒருவர் கூறியதுபோல் “அன்புப் பொதிகள்”) மடல்களும் முதலில் அனுப்பிவைக்கப்பட்டன. அடுத்தடுத்த மாதங்களில், வெப்பமானி, பணம்(நன்கொடை) கையுறைகள் மற்றும் முகக்கவசங்கள் போன்றன இத்திட்டத்தின் மூலம் அனுப்பப்பட்டன. அதிகப்படியாக உட்கொண்டு ஆபத்தினை ஏற்படுத்தினாலும் என்ற அச்சத்தினால் பணியாளர்கள் பரிசிட்டமோல் மாத்திரைகளை அனுப்பத் தயங்கினர். எனினும் மார்ச் மாத நடுப்பகுதியளவில் இது கடைகளில் கிடைக்கக்கூடியதாக இருக்கவிலலை.

**உணவு விநியோகம்:** உணவு உடனடித் தேவையாக உள்ளது என்பது உடனும் தெரியவந்தது. ஏனையவர்கள் எல்லோரும் உணவுப்பொருட்களை சேகரித்துவைத்த நேரத்தில் உணவுப் பொருட்கள் இல்லாதவர்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் விநியோகிக்கப்பட்டன. பின்னர், காய்கறி மற்றும் பழப் பெட்டிகளை அனுப்புவதற்கு பணியாளர்கள் மையப்படுத்தப்பட்ட விநியோக முறையை ஏற்படுத்தினர். நாடளாவிய ரீதியில் 50 பேர் இந்தப் பெட்டிகளைப் பெற்றுக்கொள்கின்றனர். ஆனால்

அரிசி மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருட்களுக்கு மீண்டும் தேவை ஏற்படுபவர்களுக்கு விநியோகம் செய்ய போதுமான பொருட்கள் இல்லை.

*"இந்தத் திட்டத்தினால் எனக்கு அனுப்பப்பட்ட உணவுப் பெட்டிகள் எனக்குப் பெரிதும் உதவியாக இருந்தன. எனக்கும் எனது நிலையிலுள்ள ஏனையவர்களுக்கும் இந்த பொருளாதார மற்றும் உணர்வுரீதியிலான உதவி மிகப் பெரிய உதவியாகும். நாம் தனித்து இல்லை என்பதையும் எமக்குப் பின்னார் ஓர் அணி உள்ளது என்பதையும் எம்மை முன்னோக்கி கொண்டுசெல்வதற்கான ஆதரவு உள்ளது என்பதையுமிட்டு ஓர் பெரிய ஆறுதலாக உள்ளது. எனது வாழ்நாள் முழுவதும் இதற்கு நன்றியுடையவனாக இருப்பேன்."*

**சுகாதரா அறிவு கிடைக்கச் செய்தல்:** பொதுவில் தமது மொழிகளில் சுகாதாரத் தகவல்களை இவர்கள் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருப்பினும், ஏற்கனவே சித்திரவதையினாலும் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படலாம் என்ற அச்சுறுத்தலினாலும் அதிர்ச்சிக்குள்ளாகியிருப்பதால் இந்த வைரசினால் ஏற்பட்டுள்ள மேலதிக பயத்தினால் இவர்கள் செயலற்றுவிட்டனர்.

*"எனது அறையை விட்டு வெளியே செல்ல எனக்குப் பயம். அனேகமான வேளைகளில் நான் எனது அறையினுள்ளேயே இருக்கின்றேன். வேறு அறைகளில் இருப்பவர்கள் யார் என்பது எனக்குத் தெரியாது. ஒருவருக்கொருவர பயந்தவர்களாகவே நாம் உள்ளோம். வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்காக நாம் ஒருவரை ஒருவர் காண்பதை தவிர்த்துக்கொள்கின்றோம்."*

## பிரித்தானிய அரசாங்கத்திள் சலுகைகள்

மேற்குறிப்பிடப்பட்ட தலையீடுகள் உயிர்பிழைத்துத் தப்பிவந்தவர்கள் தமது காலத்தைக் கடத்துவதற்கான நோக்கத்துடன் மேற்கொள்ளப்படுகின்ற இடைக்கால நடவடிக்கைகள் ஆகும். இந்தச் சூழலில் வழங்கக்கூடியதாக உள்ள உளவியல் சார்ந்த ஓர் சிறிய திட்டமே இதுவாகும். இந்த விடய ஆய்வுகளில் வெளிப்படுத்தப்பட்டதைப் போன்று, உயிர் பிழைத்துத் தப்பி வந்தவர்களால் முகங்கொடுக்கப்படுகின்ற பிரச்சினைகளின் ஆழத்தினையும் சமாளிக்கமுடியாத் தன்மையையும் பொறுத்தவரையில், அரசாங்கத்தின் உடனடித் தலையீடு மிக முக்கியமானதாகும். புகலிடக் கோரிக்கையாளர்கள் தொடர்பான சட்டவிதிகளில் மேலதிக அதிகரிப்பினைச் செய்கின்ற அதேவேளையில் ஏனைய உடனடி சலுகைகளும் தேவைப்படுகின்றன. அவையாவன:

### தற்காலிக வதிவிட அனுமதியை வழங்குதலும் நாட்டுக்குத் திருப்பி அனுப்புதல் மற்றும் கட்டாய நாடுகடத்தல் தொடர்பான நடைமுறையில் மாற்றங்களை ஏற்படுத்துதலும்

கோவிட்-19 தொற்றுநோய் காலப்பகுதியில் பிரித்தானியாவில் தற்காலிக வதிவிட அனுமதியை வழங்குமாறும் நாட்டுக்குத் திருப்பி அனுப்புதல் மற்றும் கட்டாய நாடுகடத்தல் தொடர்பில் மாற்றங்களை ஏற்படுத்துமாறும் நாம் அரசாங்கத்தினை வலியுறுத்துகின்றோம். எல்லோரையும் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு ஓர் சமூகமாக, மிகவும் இயலாதவர்கள் உட்பட அனைவரையும் அர்ப்பணிப்புச் செய்யுமாறு நாம் கோரிக்கை விடுகின்றோம். மேலே ஆராயப்பட்டதைப் போன்று, புகலிடம் கோருகின்ற சித்திரவதையில் இருந்து தப்பிவந்தவர்களுக்கு சிறைப்படுத்தல் என்பது சகித்துக்கொள்ளமுடியாத ஓர் திணிப்பாகவே இருக்கும். இவர்களுக்கு குறைந்த பட்சம் தற்காலிகமாகவேனும், குடிவரவு அந்தஸ்தினை ஒழுங்குசெய்வதற்கு கட்டாய மனிதாபிமான அடிப்படையிலான காரணங்கள் உண்டு.

### வேலை செய்வதற்கு தற்காலிகமாக அனுமதியளித்தல்

தமிழ் பழமொழி: 'செய்யும் தொழிலே தெய்வம்'. புகலிடக் கோரிக்கையாளர்கள் வேலை செய்வதற்கு தற்காலிகமாக அனுமதிக்குமாறு நாம் அரசாங்கத்தினை வலியுறுத்துகின்றோம். இது பிரித்தானயாவிலுள்ள பருவகால தொழிலாளர் பற்றாக்குறையினைத் தீர்ப்பதற்கு அனுகூலமாக இருக்கும். இந்த அனுமதி எந்தவித வரையறைகளும் இன்றி வழங்கப்படவேண்டும். எனவே திறமையற்ற தொழிலாளர்களும் அனுகூலமடையமுடியும். மருத்துவ மற்றும் சமூகரீதியான தலையீட்டினைக் காட்டிலும் வேலைவாய்ப்பினை ஏற்படுத்துவது வாழ்க்கைப் பரப்புகளில் பரந்துபட்ட பலன்களை ஏற்படுத்தும். வேலையின்மையாலும் மற்றும் வேலைவாய்ப்பின் நோக்கமும் தனித்துவமும் கொண்டுவரும் எதிர்மறை விளைவுகளுக்கும் அதிர்ச்சியினை அனுபவித்தவர்கள் எளிதில் பாதிக்கப்படக்கூடியவர்கள். சமூகத்தில் ஓர் அர்த்தமுள்ள பங்கினை வகிப்பதற்கான வாய்ப்பும் நிதிசார் உதவியினை ஒருவருக்கு வழங்குவதும் உளவள ஆரோக்கியத்திற்கு மிகப்பெரும் அனுகூலமாக இருக்கும் என்பதுடன் நலன்புரி அமைப்புக்கள் மற்றும் தொண்டுநிறுவனங்களில் தங்கியிருப்பதைக் குறைப்பதற்கும் உதவும்.

**சுகாதார சேவைகள் கிடைக்கக்கூடியதாக மேம்படுத்தல்**

(இலவச மருந்துச் சிட்டைகளுக்கான) HC2 விண்ணப்பங்கள் தன்னிச்சையாகப் புதுப்பிக்கப்படல்: தற்போது ஆறு மாதங்களில் காலாவதியாகும் புகலிடக் கோரிக்கையாளர்களுக்கான இலவச மருந்து பெற்றுக்கொள்ளும் உரிமையை தன்னிச்சையாகப் புதுப்பித்துக்கொள்ளுமாறு நாம் கோருகின்றோம். ஆங்கிலத்திலுள்ள இந்த விண்ணப்பங்கள் நிரப்புவதற்குச் சிக்கலானவை. எனவே அவை ஆறுமாதங்களுக்கு ஒரு தடவை மீள நிரப்பப்படத் தேவையில்லை. இது மருத்துவ ரீதியான பராமரிப்பில் ஓர் தடையாக இருக்கின்றது. ஒருவரின் புகலிடக் கோரிக்கைக்கான தீர்ப்பு கிடைத்துவிடும் என்ற ரீதியில் இந்த உரிமை ஆறு மாதங்களில் காலாவதியாகின்றது. ஆனால் இது நடைமுறையில் இல்லை என்பதோடு கோவிட்-19 மேலும் தாமதங்களை ஏற்படுத்துகின்றது.

மருத்துவ சிகிச்சைக்கான நியமனத்தை மேற்கொள்வதற்கு மாற்று முறையினை வழங்குதல்: NHS மருத்துவ சிகிச்சை நிலையங்களில் நியமனங்களை மேற்கொள்ளுதல் மற்றும் மருந்துச் சிட்டை-களைப் புதுப்பித்தல் போன்றவற்றை ஒன்லைன் மூலமாக மேற்கொள்ளவேண்டும் என்பதால் பல புகலிடக் கோரிக்கையாளர்கள் தவிர்க்கப்படுகின்றனர். ஆங்கிலம் பேசத் தெரியாதவர்களுக்கும் கணினி அல்லது தொலைபேசி data இல்லாதவர்களுக்காக ஓர் மாற்று முறை ஏற்படுத்தப்படவேண்டும்.

இவ்வாறு செய்யாதுவிடின், அதன் விளைவு மன மற்றும் உள ஆரோக்கியத்தினை சீர்குலைக்கும் என்பதுடன் NHS இன் விபத்து மற்றும் அவசரகால சேவைப் பிரிவின் மீது மேலும் அழுத்தத்தினை ஏற்படுத்தும். இந்த தொற்றுநோய்க்கு முன்னரேயே உளவள சிகிச்சை பெற்றுக்கொள்வது முக்கியமானதாக இருந்தது. தற்போது இது மேலும் சிக்கலாகியுள்ளது.

சித்திரவதையில் இருந்து தப்பியவர்களுக்கு உளவள சிகிச்சையினை முன்னுரிமைப்படுத்துமாறு நாம் அரசாங்கத்தினை வலியுறுத்துகின்றோம்.

மருத்துவ சேவைகளைப் பெற்றுக்கொள்ள புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு உதவும்முகமாக மொழிபெயர்ப்பாளருடனான கூடிய ஓர் தொலைபேசி உதவிச் சேவையினை ஏற்படுத்துமாறு நாம் அரசாங்கத்தினை வலியுறுத்துகின்றோம். இது NHS மீதான அதிக சுமையினைக் குறைக்கும்.

**NASS உதவி பெற்றுக்கொள்ளும் நடைமுறையை இலகுபடுத்தல்.**

கிடைக்கக்கூடிய உதவி: குடிவரவு மற்றும் அகதிகள் தொடர்பான 1999ம் ஆண்டு சட்டத்தின் பிரிவு 95 மற்றும் பிரிவு 4 இன்படி பிரித்தானியாவில் புகலிடம் கோரும் குடிவரவாளர்கள் தாம் ஆதரவற்றவர்கள் என்பதை நிரூபிக்கும் பட்சத்தில் உதவியைப் பெற்றுக்கொள்வதற்கான ஓர் குறித்த திட்டம் நடைமுறையிலுள்ளது. இத்திட்டத்தின் கீழ் தங்குமிடவசதி மற்றும் அத்தியாவசிய தேவைக்கான பணம் (வாராந்திற்கு £37.75 அல்லது நாளாந்தம் £5.39) போன்றன உள்ளடக்கப்படுகின்றன.

உதவியைப் பெற்றுக்கொள்வதிலுள்ள சவால்: இருப்பினும் எமது குழுவிலுள்ள அனேகமானோரால் ஒரு சில காரணங்களுக்காக இத்தகைய உதவியினைப் பெற்றுக்கொள்ளமுடியவில்லை. சிலர் பிரித்தானியாவுக்கு அண்மையில் வந்தவர்கள் என்பதுடன் இத்தகைய உதவி உள்ளது என்பது தெரியாமலிருக்கின்றனர். அல்லது இதன் நடைமுறைகளுக்குள் தற்போதும் சென்றுகொண்டிருக்கின்றனர். இந்த உதவி தொடர்பில் தெரிந்தவர்களுக்கு விண்ணப்பப் படிவத்தினை நிரப்புவது சவாலாக உள்ளது. இந்த விண்ணப்பப் படிவம் சிக்கலானது என்பதுடன் ஆங்கிலத்தில் உள்ளது. இதனை பூரணப்படுத்த ஓர் முகவரி தேவை. இந்த விண்ணப்பப் படிவத்தினை நிரப்பக்கூடிய அளவிற்கு அனேகமானவர்களுக்கு ஆங்கில அறிவு இல்லை. அவர்களுடைய நிரந்தரமற்ற வாழ்வு நிலைகளை எடுத்துக்கொண்டால் அவர்களால் முகவரி ஒன்றினை வழங்கமுடியாது. சிலர் இங்குவந்து தொலைதூர உறவினர்களுடன் தங்கியிருந்து உள்விவகார அலுவலகத்தில் தம்மை பதிவு செய்ய அவர்களுடைய முகவரியைப் பயன்படுத்துகின்றனர். ஆனால் பின்னர் வேறு இடத்திற்கு மாறுமாறு நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். ஆனால் அவர்கள் உள்விவகார அலுவலகத்தில் தமது முகவரியை மாற்றிக்கொள்வதில்லை. அவர்கள் ஆரம்பத்தில் இருந்த வீட்டுக்காரரிடம் சென்று முகவரியை உறுதிப்படுத்தும் ஆவணத்தினைக் கேட்டால் பொதுவில் அவர்கள் அதனை வழங்க மறுக்கின்றனர். அதேபோல், புதிய வீட்டுக்காரரும் பயத்தின் காரணமாக வழங்க மறுக்கின்றனர் (பெரும்பாலும் ஏன் எனத் தெரியவில்லை) உள்ளூர் கவுன்சிலிடமிருந்து ஏதும் பிரச்சினைகள் தமக்கு ஏற்படலாம் என்ற பயம் அவர்களுக்கு இருக்கலாம். புகலிடக் கோரிக்கையாளர் உதவியைப் பெற்றுக்கொள்ள வழியில்லாமல் விடப்படுகின்றார்.

கோவிட்-19 காலத்தில், NASS உதவிக்கான விண்ணப்பம் இலகுபடுத்தப்படவேண்டும் என்பதுடன் பராமரிக்கும் குடும்பத்தின் முகவரியினை உறுதிப்படுத்தும் ஆவணம் வழங்கவேண்டும் என்ற நிபந்தனை சித்திரவதையிலிருந்து தப்பியவர்களுக்கு உதவும் ஓர் தொண்டு நிறுவனத்திடமிருந்து அல்லது உளவள சுகாதாரப் பராமரிப்பு நிலையத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும் சிபார்சுக் கடிதத்தினை ஏற்றுக்கொள்ளக்கூடியதாக மாற்றியமைக்கப்படவேண்டும்.

## எதிர்காலம்

உலகளாவியரீதியில் முடக்கநிலைகளும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளும் தளர்த்தப்பட்டுவருகின்றபோதிலும், எதிர்காலத்தில் முடக்கநிலைகள் ஏற்படுவது தவிர்க்கப்படமுடியாதது என்பதும் தொற்று வீதம் அதிகரித்தால் கட்டுப்பாடுகள் மீண்டும் விதிக்கப்படலாம் என்பதும் தொற்றுநோயின் இரண்டாவது அலைக்கு நம்மை தயாராக்கிக்கொள்ளவேண்டும் என்பதும் பரவலாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. இப்போது நாம் என்ன செய்கின்றோமே அதுவே இப்போதும் எதிர்காலத்திலும் உயிர்களைப் பாதுகாக்கும். இவ்விடய ஆய்வில் உள்வாங்கப்பட்டவர்கள் அசாதாரண தொய்வுநிலையினை வெளிப்படுத்தியுள்ளனர். ஆனால் கோவிட் 19 அவர்களுடைய அற்ப ஆதரவு அமைப்புக்கள் அனேகமானவற்றை அழித்துவிட்டது. அவர்களை ஆற்றுப்படுத்தக்கூடியவாறு கருணையுடன் செவிமடுத்துச் செயற்பட்டு அவர்களுக்கு நாம் உயிர் நாடியாக இல்லாவிட்டால் ஏற்கனவே ஏதிலிகளாக வாழும் இவர்களுக்கு கோவிட்-19 மேலும் பாதிப்பினை ஏற்படுத்தும்.

## பிற்குறிப்புக்கள்

1 https://www.ifs.org.uk/inequality/chapter/are-someethnic-groups-more-vulnerable-to-covid-19-than-oters/
https://blogs.worldbank.org/opendata/impact-covid-19-coronavirus-global-poverty-why-sub-saharan-africa-mightbe-region-hardest

https://migrationdataportal.org/themes/mig ration-datarelevant-covid-19-pandemic

2 The UN Panel of Experts report speaks of credible allegations to support a finding of the crime against humanity of persecution", (pages 69, 71), A/HRC/30/CRP.2.OISL Report (§1174).

3 OISL Report, 2015, A/HRC/30/CRP.2.

4 Bowlby, J. Attachment and Loss, Volume 1, Attachment (1969), New York: Basic Books.

5 Herman JL. 'Complex PTSD: A syndrome in survivors of prolonged and repeated trauma' (1992) J Trauma Stress
5:377–391.

6 http://id.who.int/icd/entity/585833559

7 எதிர்காலத்தில் நீதி மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பிலான நடவடிக்கைக்காக இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்களுக்கும் மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்களுக்கும் ஆதாரங்களைத் திரட்டிவைத்திருக்கும் இலாபநோக்கற்ற அமைப்பான சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்றிட்டம் என்ற அமைப்பினால் (ITJP) ஆரம்பிக்கப்பட்டது. 2016 இல் பிரித்தானியாவில் சேவைகளைப் பெற்றுக்கொள்ளாத சித்திரவதையிலிருந்து தப்பி வந்தவர்களுக்கு உதவுவதற்காக உளவியல்சார்ந்த இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இது ஆங்கில வகுப்புக்கள், தனி மற்றும் குழு உளவள ஆலோசனைகளைத் தமிழில் வழங்குதல், சிகிச்சைரீதியான கலை வகுப்புக்கள், போக்குவரத்து செலவுகளை மீளளித்தல், சூடான உணவினைப் பரிமாறல், ஏனைய அமைப்புக்களுக்கான சிபார்சுகளை வழங்குதல் போன்றவற்றை மேற்கொள்கின்றது.

8 தனது சொந்த நாட்டைவிட்டுத் தப்பிவந்து அந்த நாட்டு அதிகாரியிடம் தம்மை அகதியாக அங்கீகரிக்கும்படி உத்தியோகபூர்வமாகக் கேட்பவரே புகலிடக் கோரிக்கையாளர் ஆவார் பிரித்தானியாவின் குடித்தொகையில் 5% ஆனோர் புகலிடக் கோரிக்கையாளர்கள் ஆவர். பாதுகாப்பிற்கான தமது

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டு உத்தியோகபூர்வமாக அகதி அந்தஸ்து வழங்கப்பட்ட புகலிடக் கோரிக்கையாளர் அகதி எனப்படுவார்.

9 https://www.freedomfromtorture.org/news/joint-letteron-increasing-asylum-support-rates-in-response-to-the covid-19-crisis

10 “See High Court grants permission to judicially review the Home Office’s ‘Permission to Work’ policy for asylum seekers (17 June 2020) at https://www.duncanlewis.co.uk/news.html”

11 https://www.nhsbsa.nhs.uk/nhs-low-income-scheme/hc2-certificates-full-help-health-costs

12 The NHS prescription charge is currently £9.15 for each prescribed item.

13 http://www.asaproject.org/uploads/Factsheet-1- section-95.pdf